வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 07.11.2022 திங்கட்கிழமை இதழ் : 334 பக்கங்கள் : 16

## தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்க சிங்கள கட்சிகள் ஓரணியாக வேண்டும்!

### நிமலுக்கு கூட்டமைப்பு பதில்



யாழ்ப்பாணம், நவ. 07

தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப் படாமல் இருப்பதற்கு பிரதான காரணம் சிங்கள கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதே. இதை தமிழ் மக்களுக்கு பாடம் எடுக்க முற்படும் சிங்கள அரசி யல் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பங் காளி கட்சியான தமிழீழ 15

## உட்கட்சி பூசல் எதிரொலி

## தமிழ் அரசின் மத்திய குழு வெகுவிரைவில் கூடுகிறது

யாழ்ப்பாணம், நவ. 07

இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் எழுந்துள்ள உட் கட்சி பூசல்கள் காரணமாக மத்திய செயல்குழு கூட் டம் இன்னும் ஓரிரு வாரங்களில் கூட்டப்படவுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தனிப்பட எடுக்கும் தீர்மானங் களை பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்க் கிறார்கள் என்று பகிரங்கமாக சாடியிருந்தார். 15

## தேர்தலை நடத்தாதிருக்கவே மகிந்த தலைமையில் குழு!

### சிறீதரன் எம். பி. சாடல்

வடமராட்சி, நவ. 07

அரசாங்கம் ஒரு தேர் தலுக்கு செல்ல தயாராக இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை. அது நடக்கக் கூடாது என்பதற்காகவே முன்னாள் தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தல மையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய குழுவை நியமித்துள்ளனர் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரி வித்துள்ளார்.

வடக்கு 15



## மோடி - ரணில் சந்திப்பு முயற்சி தோல்வி

# பதவி விலகுகிறார் மிலிந்த மொறகொட?

கொழும்பு, நவம்பர் 07

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திக்க வைப்பதற்கு இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொட எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. இந்நிலையில், அவரை மீறி முன்னெடுக்கப்படும் விடயங்களால் அதிருப்தியடைந்துள்ள மிலிந்த தனது தூதுவர் பதவியை துறக்கவுள்ளார் என்று கொழும்பு அரசியல் உயர்வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. 15

## 150 இலங்கை பெண்கள் அடிமைகளாக விற்பனை!

கொழும்பு, நவ. 07

இலங்கையிலிருந்து டுபாய் நாட்டுக்கு சுற்றுலா வீசாவில் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து ஓமான் நாட்டில் தாங்கள் அடிமைகளாக விற்கப் பட்டுள்ளனர் என்றும் தங்களை மீட்குமாறு 150 பெண்கள் அபயம் கோரியுள்ளனர்.

வீட்டுப் பணிப்பெண்களாக அங்குள்ள அவர் கள் அனுப்பி வைத்துள்ள காணொலிகளிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். இவ்வாறு கோரிக்கை விடுத்தவர்களில் தமிழ், முஸ்லிம், சிங்கள பெண்கள் அடங்குவர்.

அவர்கள் விடுத்த கோரிக்கையில்,

இலங்கையிலுள்ள முகவரும் இங்கே ஓமான் நாட்டிலுள்ள முகவரும் எங்களை ஏமாற்றி சுற்றுலா வீசாவில் அழைத்து வந்து எங்களை இங்கே ஓமானில் விற்று விட்டார்கள். இத னால் நாங்கள் இப்போது அடிமைகளாக இங்கே அகப்பட்டுக் கொண்டுள்ளோம். 15

## பஸ் அனுமதி பத்திரம் இனி தினமும் சோதனை!

யாழ்ப்பாணம், நவ. 07

தூரசேவையில் ஈடுபடும் அனைத்து பேருந்துகளின் வழித்தட அனுமதிப் பத்திரத்தை தினமும் சோதனை யிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரி வித்துள்ளார்.

வவுனியாவில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம் பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்தனர். விசாரணை களில் விபத்துக்குள்ளான பேருந்துக்கு வழித் தட அனுமதி இல்லை என்பது தெரிய வந்தது. இந்த நிலையிலேயே, ஆளுநர் இந்த விடயம் 15



முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க ஆகியோர் அண்மையில் திருமண நிகழ்வு ஒன் றில்கூடிப் பேசியவேளை...!

## சகல தனியார் பஸ் சேவைகளும் நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து

### நாளை முதல் நடைமுறைக்கு யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு


யாழ்ப்பாணம், நவ. 07

தனியார் பேருந்து சேவையின் உள்ளூர், வெளிமாவட்ட, கொழும்புக் கான இரவு சேவை என மூன்று வகையான பஸ் சேவைகளும் நாளை செவ்வாய்க்கிழமை முதல் யாழ். நக ரத்தில் அமைக்கப் பட்ட நெடுந்தூர பேருந்து நிலை யத்தில் இருந்து நடைபெறும் என்று யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்த செய்திக் குறிப் பில், 15

## போராட்ட சிந்தனையை மழுங்கடிக்கவே வடக்கில் போதைப்பொருள் பாவனை!

### விக்னேஸ்வரன் எம். பி. சந்தேகம்



யாழ்ப்பாணம், நவ. 07

தமிழரின் உரிமைப் போராட்டம் குறித்த சிந்த னையை இளைஞர்களிடத்தில் மழுங்கடிக்கும் நோக்கு டன் போதைப்பொருள் விற்பனையையும் பாவனை யையும் வடக்கில் வேரூன்ற செய்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்குள் உள்ளது - என்று கூறியிருக்கிறார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ் வரன். 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு செய்தி அறிக்கை. வட்ஸ்அப்பில் இந்த ஊர்க்குருவிக்கும் கிடைத்தது. பல தடவைகள் பலருக்கும் பகிரப்பட்டது என்ற குறிப்பை வட்ஸ்அப் தெரிவித்தது. இதிலிருந்து அந்த செய்தி பலருக்கும் பகிரப்பட்ட ஒன்று என்பது தெரிவந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டன் மகாராணியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்றிருந்தபோது அங்குள்ள பல இலங்கையர்களையும் சந்தித்திருந்தார்.

அவ்வாறு அவர் சந்தித்தவர்களில் அங்குள்ள முக்கிய தமிழ் வர்த்தகப் பிரமுகரும் ஒருவர். அவர் தனது நிறுவனத்தின் மற்றுமோர் அதிகாரியுடன் ரணில் தங்கியிருந்த ஹோட்டலுக்கு சென்று சந்தித்திருந்தார்.

நண்பர் அனுப்பிய செய்தி, இந்த சந்திப்பு தொடர்பானது என்பது முதல் பந்தியிலேயே தெரிந்தது. அதாவது, “பிரித்தானிய மகாராணியாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ள இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டன் வந்திருந்தார். நேற்றுக் காலை (19) அவர் கலந்து கொண்டு விட்டு மாலை...” - இப்படித்தான் செய்தி தொடங்கியது.

அந்தச் சந்திப்பு குறித்து ஏற்கனவே தகவல் அறிந்திருந்ததால் இந்த ஊர்க்குருவி அது பழைய செய்தி என்ற நினைப்பில் அதனைத் தொடர்ந்து படிக்கவில்லை.

சில நிமிடங்களில் அதனை அனுப்பிய நண்பரிடமிருந்து மற்றுமொரு செய்தி. அதனை அவரே தனது கருத்தாக எழுதி அனுப்பியிருந்தார்.

“இங்கே விடயம் என்னவென்றால், அந்தச் சந்திப்பில் அவர் கதைத்ததாலேயே இந்த விடுதலைகள் நடைபெறுகிறன என்பது உண்மையெனில், ஊர்க்குருவி இன்று எழுதியிருப்பதையும் கருத்தில் கொண்டால் - தமிழ் மக்களுக்கு உண்மையில் வாய்ச்சவடால் அரசியல்வாதிகள் தேவையில்லை. அரசாங்க உயர்மட்டத்தினருடன் தனிப்பட்ட உறவில் கதைத்து மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுத்தரவல்ல செல்வாக்குமிக்க சமூக அக்கறை உடைய தனி நபர்களே தேவை.’ என்றிருந்தது நண்பரின் கருத்து.

இதனைப் படித்த பின்னரே அவர் முதலில் அனுப்பிய செய்திக் குறிப்பை முழுமையாகப் படித்தேன்.

அதில், அந்தச் சந்திப்பில் குறித்த தமிழ் வர்த்தகர், ரணிலிடம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே அண்மையில் எட்டு அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது என்றும், தொடர்ந்து மற்றவர்களின் விடுதலைக்கும் அந்த வர்த்தகப் பிரமுகர் முயற்சி செய்கிறார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டன் சென்றிருந்தபோது, அவரை சந்தித்த பிரபல தமிழ் வர்த்தகரின் கோரிக்கையின் பேரிலேயே குறித்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்றால், அது நல்ல செய்திதான்.

இந்தக் கைதிகள் விடுதலை தொடர்பாக இந்தப் பத்தியில் சில நாட்களுக்கு முன்னர் எழுதியபோது, எமது அரசியல் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் பல காலமாக அதற்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றபோதிலும் அவர்களிடம் அந்த கைதிகள் பற்றிய எந்த விபரங்களும் இல்லை என்பது பற்றி எழுதியிருந்தேன். இந்தப் பத்தியில் நாம் அப்போது சொல்ல வந்தது, கைதிகள் விடுதலை பற்றி கதைக்கின்றபோது அல்லது கோரிக்கை விடுக்கின்றபோது அவர்கள் பற்றிய முழுத்தகவல்களையும் நாம் கையில் வைத்திருக்க வேண்டாமா? இன்றைய நவீன உலகில், எந்த விடயங்களைப்பற்றி கதைக்கின்றபோதிலும் அதுபற்றிய முழுத் தகவல்களையும் கையில் வைத்துக்கொண்டே கதைக்கவேண்டும் என்ற சாதாரண விடயத்தைக்கூட நம்மவர்கள் கடைப்பிடிப்பதில்லை. கைதிகள் ஒவ்வொருவர் பற்றியும் முழு விவரங்களுடன் கூடிய தகவல்கள் யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதனையே இந்தப் பத்தியில் அப்போது குறிப்பிட்டிருந்தோம். எமது கவலை எல்லாம் அப்படி தகவல்களை சேகரித்து தனித்தனிக் கவனம் செலுத்தி ஒவ்வொருவரின் விடுதலைக்கும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதே.

எந்த ஒரு கைதியாவது எந்த ஒரு தனிநபரின் அல்லது அமைப்பின் அல்லது அரசியல் கட்சிகளின் முயற்சியில் விடுதலை செய்யப்படுவாரானால் அது மகிழ்ச்சிக்குரியதுதான்.

எப்போது வெளியே வருவோம் என்று ஏங்கிக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பும் அதுதான்.

இப்போது, இன்றயை பந்தியில் சொல்ல வந்தது, கடைசியாக விடுதலையான எட்டுப் பேரின் விடுதலையும் லண்டன் வர்த்தகரின் தனிப்பட்ட செல்வாக்கால் சாத்தியமானது என்றால், அது மிகவும் மகிழ்ச்சிக்கும் அவருக்கான பாராட்டுக்கும் உரியதுதான். அந்த வர்த்தகர், கைதிகள் விடயத்தில் அக்கறை கொண்டிருக்கிறார் என்பதையும் இந்த ஊர்க்குருவி அறிந்து கொண்டிருக்கின்றது.

கடந்த வாரம் குறித்த வர்த்தகரின ஏற்பாட்டில் விடுதலையான கைதிகளுக்கு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இரவு உணவு வழங்கப்பட்டு பெரிய தொகை பணமும் வழங்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இது ஒரு நல்ல ஆரம்பம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தனிப்பட்ட நண்பர்களை சந்தித்து அவர்களின் கோரிக்கையின் பேரில் கைதிகளை விடுவித்தார் என்றால், இதுபோல ரணிலுடன் தனிப்பட்ட தொடர்புகளையும் நட்புக்களையும் கொண்டிருக்கும் பல தமிழர்கள் இருக்கின்றனர். அவர்களும் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களை செய்துகொடுக்க முன்வந்தால், தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றோம் என்று கூறிக்கொண்டு பல வருடங்களாக அரசில் செய்யும் நமது அரசியல்வாதிகளின் தேவையே நமக்கு இல்லாமல் போய்விடும்.!

- ஊர்க்குருவி



## கௌரவமான தீர்வை வலியுறுத்தி நேற்று கல்மடுவில் போராட்டம்!

கிளிநொச்சி, நவ. 07

மக்கள் அரசியல் தீர்வுடன் கூடிய சுய கௌரவத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்தி கிளிநொச்சி - கல்மடுவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு மக்கள் அரசியல் தீர்வுடன் கூடிய சுயகௌரவத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்தி வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழு 100 நாள் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இதன் 98ஆவது நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்மடுவில் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் நில அபகரிப்பு ,தொல்லியல் என்ற பெயரில் வனஇலா காணிகளை சுவீகரிப்பு போன்ற விடயங்களை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. (ஐ)

## கற்றல் உபகரணங்களின் விலைகளும் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 07

பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்களின் விலைகள் 300 வீதத்தால் அதிகரித்துள்ளன என்று பாடசாலை உபகரண விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடதாசி மற்றும் அச்சிடலுக்குத் தேவையான ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாகவே, குறித்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உலக சந்தையில் கடதாசியின் விலை அதிகரிப்பு, வங்கி வட்டி வீதம் அதிகரிப்பு மற்றும் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகிய காரணிகளால் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## ஒழுக்காற்று நடவடிக்கைக்கு பயந்தே துணைவேந்தருக்கு எதிராக முறையீடு!

### யாழ். பல்கலைக்கழக தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 07

ஒழுக்காற்று நடவடிக்கைக்குப் பயந்தே பல்கலைக்கழக மாணவன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில், துணைவேந்தருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் தான் ஒரு மாணவன் என்ற வரம்பைத் தாண்டி, மாணவர் ஒழுக்கக் கோவை மற்றும் மாணவர் ஒன்றிய செயல்பாட்டு நடைமுறைகளை மீறிச் செயல்பட்டதன் காரணமாக அவர் மீதான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்படதாலேயே துணைவேந்தர் மீது மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டை மேற்கொண்டார் என்று கூறப்படுகின்றது.

மாணவர்களின் உரிமைக்காகவும் அடக்குமுறைக்கு எதிராகவும் வரைமுறையுடன் செயல்பட்ட தன் மீது பழி வாங்கப் போவதாக துணைவேந்தர் பகிரங்கமாகக் கூறினார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் முறைப்பாடு செய்தார்.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச் சேவை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே, மேற்கண்டவாறு கூறப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் துறையில் உள்ள இரு விரிவுரையாளர்களுக்கு இடையிலான தனிப்பட்ட முரண்பாடுகளில், விரிவுரையாளர் ஒருவரால் குறித்த மாணவன் தவறாக வழிநடத்தப்பட்டு வந்துள்ளார்.

மாணவர்களை விரிவுரைகளுக்கு போக வேண்டாம் என தடுத்துள்ளார். துறை ஒன்றில் காணப்படும் முரணபாட்டுக்காக விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தைத் தவறாகப் பயன்படுத்தி, ஏனைய நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்குக் கூடத் தெரியாமல், சிரேஷ்ட பொருளாளரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமல், தன்னிச்சையாக ஒரு விரிவுரையாளர் எழுதிக் கொடுத்த விடயங்களைப் பல இடங்களில் ஒப்புவித்து வந்துள்ளார்.

பீடாதிபதி, மற்றும் துணைவேந்தர் குறித்தும் ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இவரின் தன்னிச்சையான செயல்பாடுகள் பற்றி கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக முறைப்பாடுகள் பீடாதிபதிக்கு கிடைத்துள்ளன.

இவரின் செயல்பாடுகள் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு இருக்கின்ற நடத்தை சார் எல்லைகளை மீறிய காரணத்தினால், விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளர்கள் பலர் எழுத்து மூலம் முறைப்பாடுகளைச் செய்திருந்தனர்.

இந் நிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி அனைத்துப் பீடங்களினதும் மாணவர் ஒன்றியங்களின் பிரதிநிதிகளுக்கும், துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது, குறித்த மாணவன் தன்னிச்சையாக மாணவன் என்ற எல்லையை மீறிச் செயல்படுகின்றமை குறித்தும், இதனால் ஏற்படப் போகும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்தும் துணைவேந்தரால் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

குறித்த மாணவன் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு நீண்ட காலமாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த போதிலும், அவரது மாணவர் ஒன்றியப் பதவி கடந்த வாரத்துடன் முடிவுக்கு வந்ததனாலும், அவர் கடந்த மாதம் இறுதி வருடப் பரீட்சைக்குத் தோற்றியதன் காரணமாகவே, பரீட்சையைக் குழப்பக் கூடாது என்ற நோக்கிலேயே விசாரணைகள் ஒத்திப்போடப்பட்டன என்றும், கடந்த 3ஆம் திகதி அவர் மீதான முதலாவது விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாட்டைச் செய்துள்ளார் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

“உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்”

*- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)*

ஈழநாடு
Eelanadu
07.11.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உறுதியான செயல்பாடுகளே இப்போது தேவையானது

2010இல் காணப்பட்ட தமிழ்த் தேசிய அரசியல் சூழல் இப்போதில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பானது - என்று கூறுவது போன்றுதான் தமிழ்த் தேசிய அரசியலின் இன்றைய நிலை இருக்கின்றது. இதற்கு முதலாவது காரணம் கட்சிகளின் தலைவர், இரண்டாவது காரணம் சிவில் சமூக அமைப்புகள் என்று தங்களை கூறிக்கொள்பவை. எனவே, இப்போது தேவையானது ஊடக அறிக்கைகளுக்கு அப்பாலான செயல்பாடாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள் முரண்பாடுகளே இதுவரையில் கதையாக இருந்தது. இப்போது அதற்கு சமாந்தரமாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் உள் முரண்பாடுகளும் வெளியில் தெரிகின்றன. அண்மையில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருந்த கருத்துகள் தமிழ் அரசு கட்சியின் உள் முரண்பாடுகளின் தீவிரத்தை பகிரங்கப்படுத்தியிருந்தன. சுமந்திரன் தொடர்பான அதிருப்திகளை சிறீதரன் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். இதனை ஆராய்வதற்கு தமிழ் அரசு கட்சியின் உயர் குழு கூடவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இன்னும் எத்தனை காலத்துக்கு இவ்வாறு பொதுவெளிகளில் முரண்படுவதும் பின்னர், கட்சியில் கூடி ஆராய்வதும் ஒரு தொடர் கதையாக இருக்கப் போகின்றது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் பொறுப்பை பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால், சம்பந்தன் இதுவரையில் அதனை செய்யவில்லை. இந்த விடயம் தொடர்பில் பங்காளி கட்சிகளும் இதுவரையில் கவனம் செலுத்தவில்லை. சம்பந்தனைப் பொறுத்தவரையில் அவரால் இனி செயல்பட முடியாது. இந்த நிலையில் கூட்டமைப்பின் கட்டமைப்பை மறுசீரமைத்து அதனை முன்கொண்டு செல்ல வேண்டும்.

ஆனால், அதற்கான நம்பிக்கை ஊட்டக்கூடிய எந்தவொரு முயற்சியும் இதுவரையில் இடம்பெறவில்லை. அடுத்தது, தமிழ் அரசு கட்சியின் முரண்பாடு. இன்றைய நிலையில் தமிழ் அரசு கட்சி ஒன்றுதான் வடக்கு - கிழக்கில் வாக்குவங்கியைக் கொண்டிருக்கும் கட்சியாகும். தமிழ்த் தேசியம் பேசும் ஏனைய கட்சிகள் பெரும்பாலும் யாழ்ப்பாண கட்சிகளாகவே இருக்கின்றன. இந்த நிலையில் தமிழ் அரசு கட்சியின் உள் முரண்பாடுகள் நிலைமைகளை மேலும் சிதைவடையச் செய்கின்றன. ஏனெனில், தனிநபர்கள் தொடர்பான முரண்பாடுகளால் கட்சியின் செயல்திறன் வலுவிழந்து செல்கின்றது. உண்மையில் கூட்டமைப்பின் பின்னடைவுக்கான பிரதான காரணம், தனிநபர்களின் மேலாதிக்கமும் அதனை சரிசெய்ய கட்சியின் தலைமையால் முடியாமல் இருப்பதும்தான். இதே நிலைமைதான் தற்போது தமிழ் அரசு கட்சிக்கும் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் அரசு கட்சியின் தலைமையை கருத்தில் கொள்ளக்கூடிய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் இல்லை. இந்த நிலையில்தான் தனிநபர்களுக்கிடையிலான முரண்பாடுகள் தீவிரமடைந்து செல்கின்றன.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கூட்டமைப்பும் - அதேவேளை அதன் பிரதான கட்சியான தமிழ் அரசு கட்சியும் ஒரே நேரத்தில் உள் முரண்பாடுகளுக்குள் சிக்குண்டு அதனை சரிசெய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. அதேவேளை, கூட்டமைப்புக்கு மாற்றான கட்சிகளாகத் தங்களை நிரூபிக்க முற்பட்ட தரப்புகளும் முன்னோக்கி செயலாற்றும் வல்லமையுடன் இல்லை. இதுவரையில் அவர்களின் வல்லமையை அவர்கள் நிரூபிக்கவில்லை. கூட்டமைப்பை விமர்சிக்கும் அளவுக்கு கூட்டமைப்புக்கு மாற்றான தலைமையாக தங்களை இதுவரையில் அவர்கள் நிரூபிக்கவில்லை. எனவே, கூட்டமைப்பின் கட்சிகளின் தலைவர்களும் தலைவர்களாக வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் வழமையான பேச்சுகளுக்கு அப்பால் கூட்டமைப்பை முன்கொண்டு செல்வதற்கான ஆக்கபூர்வமான, உறுதியான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

# இந்தியா - சீனாவுடனான இராஜதந்திர பலப்பரீட்சையில் இலங்கை!

-இராஜதந்திரி-

இலங்கையின் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆசியாவின் இரு முக்கிய வல்லரசுகளான இந்தியாவையும் சீனாவையும் கையாள எட்டுப் பேர் கொண்ட விசேட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இலங்கை நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நாடாகும். இந்த நெருக்கடி இலங்கையை அதலபாதாளத்தினுள் தள்ளிவிட்டுள்ளதோடு வெளி உலக உதவிகளில் பெரிதும் தங்கியிருக்க வேண்டிய நிலையையும் ஏற்படுத்தி விட்டுள்ளது.

இலங்கை நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த தருணங்களில் இந்தியாவும் சீனாவுமே பெருமளவிலான உதவிகளை புரிந்திருந்தன. இலங்கைக்கு உதவுவது என்பது ஒருபுறமிருக்க இந்தியாவும் சீனாவும் தமது பிராந்திய நலன்களையே இலங்கை தொடர்பாக முதன்மைப்படுத்தியிருந்தன.

தென்னாசியாவில் வரலாற்று ரீதியாக இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவமிக்க ஸ்தானத்தில் இருந்து வருகின்றது. கடந்த காலங்களில் வாணிப ரீதியாகவும் பின்னர் காலனித்துவ ஆட்சியாளரின் நிர்வாகங்களுக்கும் இலங்கை உள்ளாகியிருந்தது.

இலங்கை தற்போது பெயரளவில் மட்டுமே ஒரு குடியரசாக இருக்கின்றதே தவிர, இந்தியாவையும் சீனாவையும் பொருளாதார ரீதியாக தங்கி நிற்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இரு நட்பு நாடுகளுடன் உறவு பாராட்டுவதில் இலங்கைக்கு நன்மையே அதிகமாக இருக்கும். ஆனால், தத்தமது எல்லைப்புறங்களில் படைகளைக் குவித்து மார்தட்டி நிற்கும் இரு போட்டி நாடுகளோடு உறவுகளை கொண்டிருப்பதென்பது இலங்கைக்கு சவால் நிறைந்ததாகவே இருக்கும்.

இதன்காரணமாகவே தற்போது சீனாவுடனும் இந்தியாவுடனும் இராஜதந்திர ரீதியான உறவை பிரச்னைகளின்றி பேணுவதோடு இரு நாடுகளிடமிருந்தும் பெற்ற கடன்களை மறுசீரமைப்பது குறித்த நடவடிக்கைகளைக் கையாளும் விதத்திலும் எட்டுப் பேர்களை கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் பொருளாதார ரீதியாக முக்கியத்துவமிக்கவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையார் எஸ்மன்ட் விக்கிரமசிங்க ஒரு பிரபலமான இராஜதந்திரியாக விளங்கியவர்.

அத்துடன், இலங்கையின் இராஜதந்திர சேவையில் பல முக்கியஸ்தர்கள் அன்று பணியாற்றியிருந்தனர்.

இலங்கையின் இன்றைய அரசியல், பொருளாதார ரீதியில் ஏற்பட்டுள்ள வெறுமையான நிலைமைக்கு இந்த இரு துறைகளிலும் போதியளவு அனுபவமோ அல்லது திறமையோ இல்லாதோர் பணிபுரிவதே முக்கிய காரணமாகும்.

இலங்கையின் சிவில் சேவைக்கு ஆட்களை சேர்ப்பதற்கான பரீட்சையைப்போல வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கும் ஆட்களை



சேர்ப்பதற்கு பரீட்சைகள் நடத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆனால் வெளிநாட்டுச்சேவைகளில் ஆங்கில அறிவோ அல்லது பொது அறிவோ உயரிய படிப்பறிவோ இல்லாத பேர்வழிகளும் தற்போது பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.


இதன் காரணமாகவே சர்வதேச அரசியலிலும் இலங்கை தலைகுனிவோடு இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ எதனையும் சாதிக்க முடியாதவர்கள் இருப்பதன் வெளிப்பாடாகவே தற்போது எட்டுப்பேர் கொண்ட விசேட குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இக்கட்டான பொருளாதார நிலபரத்தை இந்தியா, சீனா தொடர்பாகக் கையாள நியமித்துள்ளார்.

இன்றைய சர்வதேச நடைமுறைகளை எடுத்துக்கொண்டால் அரசியல் ரீதியான விடயங்களை விட பொருளாதார ரீதியான விடயங்களே நாடுகளிடையேயான உறவுகளை பெரிதும் தீர்மானிக்கின்றன.

உதவி வழங்கும் நாடுகளைவிட உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உயரிய பொருளாதார நிதி நிறுவனங்களில் இருப்போர் முழு அளவில் பொருளாதார நிபுணத்துவமுடையோராக இருக்கின்றனர். இவர்களோடு நிலமைகளை ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற்கு பதிலாக வெறுமனே காலில் வீழ்ந்து பிச்சசை எடுப்பவர்கள் போன்றே இலங்கையின் இராஜதந்திர சேவைகளிலிருப்போர் இருக்கின்றனர். திறமை வாய்ந்த இராஜதந்திரிகள் செய்யக்கூடிய பணியை நிறைவேற்ற தற்போது விசேட குழுவொன்றையே இலங்கை அரசு நியமிக்க முன்வந்துள்ளமை இராஜதந்திர சேவையிலுள்ள வறட்சியையே எடுத்தியம்புகின்றது.

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், முதலாவதாக இரு நாடுகளும் இலங்கையை மனிதாபிமான கண்கொண்டே தற்போது பார்க்கின்றன. அடுத்தபடியாகவே தமது பிரந்திய அரசியல் நலனை வைத்துக்கொள்கின்றன. இந்நிலையில், இலங்கைக்கு வேண்டிய பொருளாதர உதவிகளை பெற்றுக்கொள்ளும் அதேசமயம் இரு நாடுகளையும் இராஜதந்திர ரீதியில் இலங்கை எவ்வளவு தூரம் நல்ல முறையில் கையாள முடியுமென்பதே புதிய எட்டுப்பேரடங்கிய குழுவின் முன்பாகவுள்ள சவாலாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். செயல்களில் கவனம் தேவை. உங்கள் முயற்சியில் இழுபறி ஏற்பட்டாலும் போராடி முடிப்பீர்கள். எச்சரிக்கை அவசியம். நேற்றைய செயல் முடிவிற்கு வரும்.

**இடபம்**
பண வரவு திருப்தியாக இருக்கும். உங்கள் செல்வாக்கு உயரும்.இழுபறியாக இருந்து வந்த செயல் நிறை வேறும். நினைத்தது நடந்தே தீரும்.உங்கள் திறமை வெளிப்படும். எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும்.

**மிதுனம்**
பணவரவு அதிகரிக்கும். உங்கள் முயற்சியில் முன் னேற்றம் உண்டாகும். தொழிலில் போட்டியாளர் வில குவார். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும் பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்**
தந்தைவழி உறவினர் ஒருவரால் உதவி கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.செயலில் வெற்றிபெறதனித்திறமை வெளிப்படுத்துவீர்கள். தடைகளை தகர்ப்பீர்கள். உடல் நிலையில் இருந்து வந்த பாதிப்பு விலகும்.

**சிம்மம்**
எதிரிகளால் சங்கடத்தை சந்திப்பீர்கள். செயல்களில் இருந்த நெருக்கடி அகலும். விழிப்புணர்வு ஏற்படும் நாள். வழக்கமான உங்கள் செயல்களில் மாற்றம் உண்டாகும். நிம்மதியான நாள்.

**கன்னி**
நண்பர்களால் நன்மை உண்டு. உங்கள் அணுகு முறையால் வியாபாரத்தில் உங்களுக்கு ஆதாயம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவிற்கு வரும். உங்கள் முயற்சி பலிக்கும்.

**துலாம்**
தொழிலில் போட்டியாளர்களால் உண்டான நெருக்கடி விலகும். தைரியம் அதிகரிக்கும். முன்னேற்றம் காண் பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு வெற்றி பெற உற வினர் ஒருவர் உதவியாக இருப்பார்.

**விருட்சிகம்**
உங்களுடன் நெருக்கமாக இருந்தவர் ஒருவரால் சில சங்கடத்தை சந்திக்க நேரும்.நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும் நாள். நிதானம் தேவை. பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு**
தேவையற்ற பயம் வந்து போகும். உங்கள் சந்தோஷத் திற்காக ஒரு செயலில் ஈடுபடுவீர்கள். நெருக்கமான வர்களின் ஆதரவு நன்மை தரும். அவசரப்பட்டு எந்த வொரு முடிவையும் எடுக்க வேண்டாம்.

**மகரம்**
வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள்.செயலில் இருந்து வந்த தடை விலகும். உயர்ந்தோரின் நட்பு கிடைக்கும். முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்**
அவசரப்பட்டு யாருக்கும் எந்த வாக்குறுதியும் கொடுக்க வேண்டாம். உங்கள் கவனக்குறைவால் சில சங்கடம் ஏற்படும். நிதானம் தேவை. செயல், வார்த்தைகளில் கவனம் தேவை. மவுனம் அவசியம்.

**மீனம்**
மனம் அலைபாயும். முக்கியமான செயலில் முடிவிற்கு வர முடியாமல் போகும்.பணி புரியும் இடத்தில் நெருக்கடிகளை சந்திப்பீர்கள். பொறுப்புகளில் கூடும். தொழில் மந்தமாகும். விழிப்புணர்வு தேவை.

# இணைப்பு என்ற பேச்சுக்கே அ.தி.மு.கவில் இடமில்லை!

## எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்

சென்னை, நவ. 07

பொதுக்குழுவில் எடுத்த முடிவின்படி கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் நீக்கப்பட்டவர்கள்தான். இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டம் ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அ. தி. மு. கவை முடக்க வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறவில்லை. அ. தி. மு. கவில் “பி” அணி ஒன்றை உருவாக்கி பிளவை ஏற்ப டுத்த தி. மு. க. நினைக்கிறது. அ. தி. மு. க. உடையவில்லை ஒன்றாக இருக்கிறது. எத் தனை வழக்குகள் போட்டாலும் அதனை தவிடு பொடியாக்கி மீண்டும் ஆட்சியமைப் போம்.

பாராளுமன்ற தேர்தலில் அ. தி. மு. க பெரிய கூட்டணி அமைத்து அமோக வெற்றி பெறும். அரசியல் ரீதியாக நம்மை எதிர் கொள்ள முடியாத தி. மு. க. கொல்லைப்புற மாக வந்து செயல்படுகிறது. பொதுக்குழுவில் எடுத்த முடிவின்படி கட்சியில் இருந்து நீக்கப் பட்டவர்கள் நீக்கப்பட்டவர்கள்தான். இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. பொதுக்குழு எடுக்கும் முடிவே இறுதியானது” - என்றார்.

(ஐ)

# சிங்களப் படையின் அத்துமீறலுக்கு இந்திய அரசு எப்போது முடிவு கட்டும்?

## பா.ம.க. கட்சி கேள்வி

சென்னை, நவ. 07

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்ட மையை தமிழக அரசும், பா. ம. க. உள்ளிட்ட கட்சிகளும் கண்டித்து வருகின்றன. இராமேஸ் வரம் மீனவர்கள் போராட்டமும் நடத்தியுள் ளனர். அதற்கு பிறகும் தொடரும் சிங்கள படையினரின் அத்துமீறலுக்கு இந்திய அரசு எப்போது முடிவு கட்டப் போகிறது? என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ச. ராம தாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

வங்கக்கடலில் கச்சதீவு அருகே இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 15 பேரை சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக் கின்றன. சிங்களப் படையினரின் இந்த அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

மீனவர்கள் கைது செய்யப்பட்டதை தமிழக அரசும், பா. ம. க. உள்ளிட்ட கட்சிகளும் கண் டித்து வருகின்றன் ராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டமும் நடத்தியுள்ளனர். அதற்குப் பிற கும் தொடரும் சிங்களப் படையினரின் அத்து மீறலுக்கு இந்திய அரசு எப்போது முடிவு கட்டப் போகிறது?

இப்போது கைது செய்யப்பட்ட 15 மீனவர் களையும், ஏற்கெனவே சிறைபட்ட 7 பேரை யும் உடனடியாக மீட்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களை இனி கைது செய்யவோ, தாக்கவோ கூடாது என்று இலங்கை அரசை மத்திய அரசு கடுமையாக எச்சரிக்க வேண்டும்” - என்றார்.

(ஐ)

# இந்தியா - இலங்கை கடற்படைகள் பேச்சு



சென்னை, நவ. 07

இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையேயான 32ஆவது சர்வதேச கடல்சார் எல்லை (ஐ.எம்.பி.எல்.) தொடர் பான ஆலோசனை கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வங்காள விரிகுடாவில் இலங்கை கடற்படை கப்பலான சயூராவில் இந்த கூட்டம் நடந்தது. இந்திய கடற்படையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதி தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் வெங்கட்ராமன் மற்றும் இலங்கை கடற்படை யின் வடக்கு பகுதி தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் தென்னக்கோன் ஆகியோர் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று கருத்துகளை பகிர்ந்தனர்.

பாக்கு நீரிணை பகுதியில் இந்திய மீனவர்களின் பாது காப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு பிரச்னைகள் பற்றி இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இந்திய மீனவர்களிடம் இலங்கை கடற்படை உள்ளிட்ட அந்நாட்டு பாதுகாப்பு முகாமைகள் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இரு தரப்பினரும் உடனடியாக செயல்படக்கூடிய பிரச்னைகளில் பரஸ்பரம் தகவல்களை பரிமாறிக்கொள்வது பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு நாட்டு உறவிலும் உள்ள பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான களமாக இந்த கூட்டம் அமைந்தி ருந்ததாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

# ஆர். எஸ். எஸ்ஸின் பேரணி ஒத்திவைப்பு



சென்னை, நவ. 07

தமிழகம் முழுவதும் நேற்று ஞாயிற்றுக்கிழமை (நவ.6) நடை பெறவிருந்த ஆர்.எஸ்.எஸ். ஊர் வலம் ஒத்திவைக்கப்படுவதாக அந்த அமைப்பு தெரிவித்தது.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினம், அம்பேத்கரின் 125ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தமி ழகத்தில் 50 இடங்களில் ஒக்ரோ பர் 2-ஆம் திகதி அணிவகுப்பு நடத்த காவல் துறையிடம் அளித்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால், கடந்த மாதம் உயர் நீதிமன்றத்தை அணுகியபோது சட்டம்-ஒழுங்கு காரணத்தால் நவம்பர் 6 ஆம் திகதி அணி வகுப்பு நடத்த அனுமதி அளிக்கப்பட் டது.

இந்த நிலையில், நீதிமன்றம் நவ. 4-ஆம் திகதி வழங்கிய தீர்ப் பில் அணிவகுப்பை உள் அரங்கு அல்லது நான்கு சுவர்களுக்குள் நடத்தும்படி கூறியிருப்பது ஏற்புடையதல்ல.

இந்த வழக்கில் மேன்முறையீடு செய்யவுள்ளோம். இதனால், பேர ணியை நடத்தவில்லை என்று அந்த அமைப்பு தெரிவித்தது.

# பலாலியில் விமானத்தை இறக்க இந்தியா விரும்பவில்லையாம்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், நவ. 07

பலாலியில் விமானத்தை இறக்க இந்தியா விரும்பவில்லை என்று கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டு, மூன்று வருடங்கள் கடந்தும் அது இயங்கு நிலையில் இல்லாமை குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பலாலி விமான நிலையம் இயங்குவதற்கு தயாரான நிலையிலேயே உள்ளது. ஆனாலும் அங்கு விமானங்கள் வர தயாராக இல்லாத நிலைமையே காணப்படுகிறது. இந்திய விமானங்கள் அங்கு தரையிறங்க தயார் இல்லை. அதனாலயே விமான நிலையம் இயங்காத நிலையில் காணப்படுகிறது - என்றார்.

இதன்போது, பலாலி விமான நிலையத்தில் இருந்த தொழிநுட்ப உபகரணங்கள் உள்ளிட்டவை தெற்கில் உள்ள விமான நிலையங்களுக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளன என்று வெளியான தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு

அது முற்றிலும் தவறான தகவல். நான் பொய் சொல்ல வேண்டிய தேவை இல்லை. பலாலி விமான நிலையத்தில் இருந்து எதுவும் எங்கும் கொண்டு செல்லப்படவில்லை.

இந்திய விமான நிறுவனங்கள் தமது விமானங்களை பலாலியில் தரை இறக்க தயாரெனில் ஓரிரவில் பலாலி விமான நிலையத்தை இயங்க வைக்க என்னால் முடியும் - என்றார்.



# துறைமுகம் நவீனமயமானால் பாதிப்புகள் அதிகரிக்கும்!

## சுப்பர்மடம் மீனவர்கள் சுட்டிக்காட்டு

வடமராட்சி, நவ. 07

பருத்தித்துறை துறைமுகம் நவீனமயமாக்கப்பட்டால் தாம் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளது என்று சுப்பர்மடம் மீனவர்கள் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

குறிப்பாக மயிலிட்டி துறைமுகம் புனரமைக்கப்பட்டதன் பின்னர் மயிலிட்டியை சேர்ந்த ஒரு தொழிலாளிகூட தொழிலில் ஈடுபட முடியாதுள்ளமை இதற்கு சிறந்த உதாரணம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) முதல் கொட்டடி, சுப்பர்மடம், உப்பு பகுதி மீனவர்கள் பிரச்னை தொடர்பில் நேரடியாக சென்று கேட்டறிந்தபோதே சுப்பர்மடம் மீனவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

பருத்தித்துறை துறைமுகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக அறிந்து எதிர்ப்பு தெரிவித்தபோது, அப்போதைய பிரதேச செயலர் ஜெயசீலன் மற்றும் படைத் தரப்பினர் தங்களை கடுமையாக அச்சுறுத்தினர் என்றும் இதனால் தங்களால் ஜனநாயக ரீதியில் தொடர்ந்தும் போராட முடியாத நிலை ஏற்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்போதுகூட பருத்தித்துறை துறைமுகத்தில் படகுகளை கட்டும் தென்னிலங்கை மீனவர்கள் மகளிர் பாடசாலை என்றும் பாராது அநாகரிமாக நடந்து கொள்கின்றனர் எனவும், பருத்தித்துறை துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டால் அருகிலுள்ள சுப்பர்மடம், கொட்டடி மீனவர்கள் தமது படகுகளை நிறுத்தி தொழிலுக்கு சென்று வர முடியாத நிலை ஏற்படும் எனவும் கூறினர்.

இதேவேளை இது தொடர்பில் கருத்து தெரிவித்த தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க அமைப்பாளர் கேர்மன் குமார அதிகாரத்தில் உள்ள யாரோ ஒருவர் தமது தேவை கருதி பாரதூரமான விளைவுகளைக்கூட பாராமல் இந்தத் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றார்கள். மக்களிடம் கேள்விகள் கேட்பதில்லை - அவர்களின் கருத்துக்களை அறிவதில்லை - அவர்களுடைய கோரிக்கைகளை கவனத்தில் கொள்வதில்லை - சூழல் மதிப்பீட்டு தாக்கங்கள் தொடர்பில் சரியான ஆய்வுகள் மேற்கொள்வதும் இல்லை என்றார். மேலும், மக்களுடன் தாம் என்றும் இணைந்து பணியாற்றுவோம் என்றும் கூறினார்.

வெள்ளிக்கிழமை சுப்பர்மடம் மீனவர்களுக்கும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்துக்கும் இடையில் சுப்பர்மடம் பொது மண்டபத்தில் இடம் பெற்ற இந்த கலந்துரையாடலில், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க அமைப்பாளர் கேர்மன் குமார, யாழ். மாவட்ட தலைவர் இ. முரளிதரன், மன்னார் மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க இணைப்பாளர், யாழ் மாவட்ட இணைப்பாளர், நிர்வாகிகள், சுப்பர் மடம் மீனவர் சங்க பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-02)



# கனகபுரம் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பம்!

கிளிநொச்சி, நவ. 07

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

நேற்று காலை 8.00 மணியளவில் மாவீரர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி அக வணக்கம் செலுத்தி சிரமதானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த சிரமதான பணியில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தங்களுடைய பிள்ளைகளின் வித்துடல்களை விதைத்த பெற்றோர், உறவுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் முதன்மை செயல்பாட்டாளர் தியாகு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன் சமூக செயல்பாட்டாளர்கள் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதையொட்டியே மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிபொருள் விலைசூத்திர நடைமுறையில் மாற்றம்!

கொழும்பு, நவ. 07

எரிபொருள் விலை தொடர்பான சூத்திரத்தை குறிப்பிட்ட திகதியில் நடைமுறைப்படுத்துவதில்லை என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார் என்று பெற்றோலிய பொருட்கள் விநியோகிப்போர் சங்கம் தெரிவித்துள்ளது.

விலைச்சூத்திரத்தை அமுல்படுத்தும் திகதியை, அன்றிரவிலேயே அறிவிப்பதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்ததாக அதன் இணைச் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்தார்.

குறிப்பிட்ட திகதிகளில் விலைச்சூத்திரத்தை அமுல்படுத்துவதால் ஏற்படும் பிரச்னைகள் குறித்து அமைச்சர் காஞ்சன விஜயசேகரவிடம் எடுத்துக் கூறியதன் பின்னர் இந்த விடயத்துக்கு அவர் தனது இணக்கப்பாட்டை தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தட்டுப்பாடு இன்றி எரிபொருள் விநியோகிக்கப்படும் என நம்புவதாக சங்கத்தின் இணை செயலாளர் கபில நாவுதுன்ன மேலும் தெரிவித்தார். (ஐ)

# இன ஐக்கியம் வேண்டி நாகவிகாரையில் பூஜை

யாழ்ப்பாணம், நவ. 07

நாட்டில் இன ஐக்கியமும் சமாதானமும் நிலவ வேண்டி 51ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதியின் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். நாக விகாரையில் விசேட பிரித் ஓதும் நிகழ்வும் விசேட பூஜை வழிபாடுகளும் நடைபெற்றன.

நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி வண. கலைமாமணி மீகஹஜந்துர சிறிவிமல தேரர் தலைமையில் இந்த விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இந் நிகழ்வில் யாழ்ப்பாண படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர படைப் பிரிவுகளின் தளபதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ-03)

# கஞ்சா கலந்த 3 கிலோ மாவாவுடன் கல்வியங்காட்டில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 07

கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளை விற்பதற்காக காத்திருந்தவரும் அதனை வாங்குவதற்காக வந்தவரும் கல்வியங்காட்டில் கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜி. பி. எஸ். மைதான பகுதியில் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட உடுவிலை சேர்ந்த 45 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அத்துடன், இவரிடம் இந்தப் போதைப் பொருளை வாங்குவதற்காக வந்த திருநெல்வேலி - பால்பண்ணையை சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.



நேற்று யாழ்ப்பாண பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சரின் கீழ் செயல்படும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரே இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். சந்தேகநபர்களிடம் இருந்து 3 கிலோ கஞ்சா கலந்தா மாவா கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் குறித்த நபர் நீண்டகாலம் இந்தப் போதைப் பொருளை யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருவது தெரிய வந்தது.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ - 03)

# கொத்தணி பாடசாலை திட்டம் அரசியல் யாப்புக்கு முரணானது

## எச்சரிக்கிறார் வடக்கின் முன்னாள் கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 07

மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக உள்வாங்குவதற்கு பதிலாக கொத்தணி பாடசாலைகளை உருவாக்குவதற்கான திட்டத்தை கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த அறிவித்துள்ளார். இது அரசியல் யாப்பின் பதின் மூன்றாவது திருத்தத்துக்கு முரணானது என்றும் மாகாண சபைகள் தொடர்பில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது எனவும் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சரின் இந்த செயல்பாட்டைக் கண்டித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

முன்னணி பாடசாலைகளை மையப்படுத்தி கொத்தணிகள் உருவாக்கப்படும். வரும் ஜனவரி மாதத்தில் ஆயிரத்து இருநூறு கொத்தணிகள் அடையாளம் காணப்படும். இதன் மூலம் அண்மித்த பாடசாலைகளுக்கு இடையே பௌதிக வளங்களும் மனித வளங்களும் பரிமாறப்படும். இவை கல்வி அமைச்சரான சுசில் பிரேமஜெயந்தவின் புதிய அறிவிப்பாகும்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் கல்வி மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட விடயமாகும். எனவே, மாகாணங்களுக்கான கல்விக் கொள்கைகளை வகுத்தல், பாடவிதானங்களைத் தயாரித்தல், பாடசாலைகளை நிர்வகித்தல், பாடசாலைகளுக்கான வளங்கள், மற்றும் வளப்பகிர்வுகள் தொடர்பில் முடிவெடுத்தல் இவை அனைத்துக்கும் மேலாக, மாகாணங்கள் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் ஆகியவை மாகாண கல்வி அமைச்சிற்கு உரிய அதிகாரங்கள் ஆகும்.

மாகாணத்துக்கு மாகாணம், மாவட்டத்துக்கு மாவட்டம், வலயத்திற்கு வலயம் பாடசாலைகளின் வளங்கள், அவற்றுக்கு இடையிலான தூரங்கள், அவற்றுக்கு இடையிலான போக்குவரத்து வசதிகள் என்பன வேறுபடுகின்றன. எனவே, இலங்கை முழுவதற்குமான பொதுவான கல்விக்கொள்கை சாத்தியமற்றதாகும். ஆகவே, தமக்கு ஏற்றவகையில் பாடசாலை வளங்களுக்கு எற்ப மாகாணங்களே பொருத்தமான திட்டங்களை வகுத்து செயல்படவேண்டும் என்பதற்காகவே கல்வி மாகாணங்களுக்குரிய விடயமாகப் பகிரப்பட்டது.



மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட விடயங்கள் அரசியல் யாப்பின் பதின் மூன்றாவது திருத்தத்தினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. அதனை மீறும் வகையில் மாகாணங்களுக்கு உரித்தான அதிகாரங்கள்மீது மத்திய அரசு தான் தோன்றித்தனமாகக் கொள்கை வகுக்க முடியாது. இது அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை மீறுவதாகும். மேலும், தேசியக் கொள்கை என்பது கொள்கையே தவிர, சட்டமல்ல.

மத்தியினால் வெளியிடப்படும் கொள்கை மாகாணங்களுக்குப் பொருந்தாதவிடத்து, அந்த மாகாணங்கள் அதனை நிராகரித்து, தமக்கான பொருத்தமான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த முடியும். மத்திய அரசு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட விடயத்தில் தமது விருப்பங்களையும் தேவைகளையும் திணிக்க முடியாது.

அவசியமேற்படின், அனைத்து மாகாண கல்வி அமைச்சர்களின் கலந்தாய்வின் அடிப்படையில் எல்லா மாகாணங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கல்விக்கொள்கை உருவாக்கப்படும் பட்சத்தில், அவற்றை அந்தந்த மாகாணங்கள் சட்டமாக்கி செயல்படுத்த முடியும்.

இவை அனைத்துக்கும் மேலாக, கல்வி அமைச்சரால் வெளியிடப்பட்ட கொத்தணிமுறை திட்டமானது 1970களில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, படுதோல்வியுடன் கைவிடப்பட்ட ஒரு திட்டமாகும். மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்த முன்னரே தோல்வியடைந்த ஒரு திட்டத்தை மாகாணசபைகளுக்கு கல்வி அதிகாரம் பகிரப்பட்ட ஒரு சூழலில், திணிக்க முயல்வதானது அமைச்சரின் அறிவிப்பு மட்டத்திலேயே தோல்வியை வெளிப்படுத்தியிருக்கின்றது.

மேலும், மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை பாதிக்கும் வகையிலான திட்டங்களோ சட்டங்களோ அனைத்து மாகாணங்களினதும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அவைகளின் ஒப்புதல் இன்றி உருவாக்கவோ செயற்படுத்தவோ முயற்சிப்பதானது அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு முரணானது என்ற உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவின் தீர்ப்பை (திவநெகும விடயத்திலான) இன்றைய கல்வி அமைச்சர் புரிந்துகொள்வது நல்லது.

எனவே, கல்வி அமைச்சர் புதிதாக கல்வி முறைமையில் மாற்றம் செய்வதாக நினைத்துக்கொண்டு கல்வியை மேலும் சீரழிக்கும் நிலைமையைத் தோற்றுவிக்காது இருக்க வேண்டும். பாடசாலைகளின் சமத்துவமான வளர்ச்சிக்குத் திட்டங்கள் தேவையே. அதனை அந்தந்த மாகாணங்கள் தமது வளங்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப உருவாக்கி செயற்படுத்தும். மத்திய கல்வி அமைச்சானது அவற்றுக்கு தேவையான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கினாலே போதுமானது - என்றுள்ளது.

(ஐ)

## பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

தென்மராட்சி, நவ. 07

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு சுற்றுலா சென்று திரும்பிய பேருந்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் பளை - இத்தாவில் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், கொடிகாமம் மீசாலை பகுதியை சேர்ந்த குகதாசன் விமல்ராஜ் , (வயது 47) என்பவரே உயிரிழந்தார்.

பேருந்திலிருந்து தவறி வீழ்ந்தவர் படுகாயமடைந்த நிலையில் அவர் உடனடியாக பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (ஐ-02)

## கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்!

யாழ்ப்பாணம், நவ. 07

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தால் நடத்தப்படவுள்ள கடல் உணவுத் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறி தேசிய தொழில் தகைமை மட்டம் 5இற்குரியது. 18 மாதங்களைக் கொண்ட இக்கற்கை நெறி முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளதாக அந்நிலையம் தெரிவித்துள்ளது.

இக்கற்கை நெறியை கற்க விரும்புவோர் எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களை முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது 071 8349073 மற்றும் 0762939888 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொண்டு பெற முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# டேவிட் பீரிஸ் குழுமத்தின் விருது வழங்கும் நிகழ்வு!

கொழும்பு, நவ. 09

டேவிட் பீரிஸ் குழுமத்தின் தொழில்நுட்ப பயிற்சி ஊடாக பெண்களை பலப்படுத்தும் திட்டத்துக்கான விருது வழங்கும் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.




நோர்த்கேட் ஹோட்டலில் காலை 9.30 முதல் நடைபெறும் இந்த நிகழ்வில் முச்சக்கர வண்டிகளை பழுதுபார்ப்பதற்கான தொழில்நுட்ப பயிற்சி வழங்கி திறனான தொழில்நுட்பவிக்கப்பட்ட மற்றும் சான்றளிக்கப்பட்ட பெண் திருத்துநர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

பெண்களுக்கான பிரத்தியேகமான மெக்கானிக் அடிப்படையிலான தொழில்நுட்ப பயிற்சித் திட்டமாக இது இலங்கையில் முதல் தடவையாக இலவசமாக ஆரம்பிக்கப்பட்டு 7 ஆவது தொகுதியாக நடத்தப்பட்ட இத்திட்டத்தில் 20 பெண்கள் சான்றிதழைப் பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சர்வதேச நீரிழிவு தினமான இன்று நடைபவனியும் மருத்துவ முகாமும்!

யாழ்ப்பாணம், நவ. 07

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 "பி" 1 உம் வட மாகாண லயன்ஸ் கழகங்களும் இணைந்து நடத்தும் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனியும் மருத்துவ முகாமும் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை காலை 8.00 மணியளவில் யாழ்ப்பாணம் - சத்திரத்துச் சந்தியில் ஆரம்பமாகும் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி. வைத்தியசாலை வீதியூடாக யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தை அடைந்து அங்கு விழிப்புணர்வு பிரசார உரைகளும் அதனைத்தொடர்ந்து இலவச நீரிழிவு பரிசோதனைகளும், இலவச கண் பரிசோதனைகளும் நடைபெறும்.

306 "பி" 1 மாவட்ட ஆளுனர் லயன் மருத்துவர் கே. எம். பத்மநாதன் வழிகாட்டலில் மருத்துவர் கே. எம். கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் முன்னாள் பணிப்பாளர் லயன் சுனில் வட்டவல பிரதம விருந்தினராகவும், முன்னாள் மாவட்ட ஆளுநர்களின் ஆளுநர் சபைத் தலைவருமான லயன் மருத்துவர் வி. தியாகராஜா சிறப்பு விருந்தினராகவும், கண் சத்திரசிகிச்சை நிபுணர் லயன் மருத்துவர் எஸ். சந்திரகுமார், நாளமிலாச் சுரப்பிகள் மருத்துவ நிபுணர் எஸ். அரவிந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-03)

ஈழநாடு



# 96 வீதமான குடும்பங்கள் நெருக்கடியால் பாதிப்பு!

## ஐ. நா. ஒருங்கிணைப்பு அலுவலகம்

கொழும்பு, நவ. 07

இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் 96 வீதமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் குறைந்தது 5-7 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அண்மைய அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர்கள் அவ்வாறு தெரிவித்துள்ளனர். இது இந்த நாட்டின் மக்கள் தொகையில் 26 வீதத்திற்கு சமம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் 96வீதமான குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அலுவலகம் குறிப்பிடுகின்றது.

நாட்டின் ஒன்பது மாகாணங்களில் உள்ள 11 மாவட்டங்களில் 2,871 வீட்டு அலகுகளைப் பயன்படுத்தி அந்த அலுவலகம் இது தொடர்பாக கணக்கெடுப்பு நடத்தியதுடன், கணக்கெடுப்பின் போது இந்த உண்மைகள் தெரியவந்துள்ளன.

பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படாது விட்டால் மனிதாபிமான உதவியின் தேவை இரட்டிப்பாக 12 மில்லியனாக உயரும் என்று அலுவலகம் எச்சரித்துள்ளது.

இந்நிலைமை இலங்கை மக்களை வறுமைக்கு இட்டுச் செல்லும் என்றும் எச்சரித்துள்ள அலுவலகம், ஏற்கனவே இலங்கையில் குடும்ப அலகுகள் பெற்றுக் கொள்ளும் உணவின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு, மருந்து, அன்றாட வாழ்வுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், குடும்ப அங்கத்தினர்கள் பெறும் உணவுப் பொருட்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையின்படி, இந்நாட்டு மக்கள் உரிய நேரத்தில் மருந்துகளை பெற்றுக் கொள்ளாமல், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது தமது சொத்துக்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இதேவேளையில், தற்போதுள்ள சிரமங்கள் காரணமாக, இலங்கையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதோடு, அதற்கு மக்கள் பலியாவதையும் காணக்கூடியதாக உள்ளதாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

அது மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வசிக்கும் மக்கள் அல்லது வேலைக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் போக்கு அதிகரித்துள்ளது. இதனால் குடும்ப அலகுகள் சீர்குலைந்துள்ளன என்றும் அலுவலகம் குறிப்பிடுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நாட்டின் சுகாதார அமைப்பு தற்போது நெருக்கடியான நிலையில் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ - சி)

# லிற்றோ எரிவாயு விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 07

லிற்றோ எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் 12.5 கிலோ சிலிண்டரின் விலை 80 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அந்த நிறையுடைய சிலிண்டர் ஒன்றின் விலை கொழும்பு மாவட்டத்துக்குள் 4,360 ரூபாயாகும்.

5 கிலோ சிலிண்டரின் விலை 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு, 1,750 ரூபாயாக விற்கப்படும்.

2.3 கிலோ சிலிண்டரின் விலை 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் தற்போதைய விலை 815 ரூபாயாகும். (ஐ)

# கமல் குணரட்ணவை பதிவி நீக்கத் திட்டம்?

கொழும்பு, நவ. 07

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து கமல் குணரட்ணவை நீக்கும் திட்டத்தில் அராசாங்கம் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு,

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நியமிக்கப்பட்ட பாரா உறுப்பினர் வஜிர அபேவர்த்தனவால் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கமல் குணரட்ணவின் விடயங்கள் வஜிர அபேவர்த்தனவால் நேரடியாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிய வருகிறது.

தற்போது அமைச்சுக்களின் செயலாளர்கள் பலர் நியமிக்கப்பட்டு வருகின்ற நிலையில் விவசாயத்துறை அமைச்சின் புதிய செயலாளர் நியமனம் இதன் முதல்கட்டமாக அமைந்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

# தனது தொகுதியின் 99 வீத மக்கள் ரணிலை ஆதரிக்குமாறு வலியுறுத்து

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, நவ. 07

தமது தொகுதிகளில் (கம்பஹா) நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்படி 99 வீதமானவர்கள் நிபந்தனையின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இத்தருணத்தில் ஆதரவளிக்க வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளனர் என்று ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமையலாம் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எதிர்வு கூறியுள்ளார்.

மேலும், தொடர்ந்தும் அரசியலில் இருப்பதா இல்லையா என்பதை மகிந்த ராஜபக்ஷவே தீர்மானிக்க வேண்டும். மொட்டு கட்சியின் தலைவராக தாம் அவரை தொடர்ந்தும் ஏற்றுக் கொள்வதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதே நேரம், மாவட்ட மட்டத்தில் மொட்டு கட்சியினால் நடத்தப்படும் கூட்டத் தொடரை தனது பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# ஓய்வுபெறும் அதிகாரிகளுக்கு வாகனங்கள் வழங்கக்கூடாது!

## திறைசேர திணைக்களங்களுக்கு உத்தரவு

கொழும்பு, நவ. 07

அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் ஓய்வுபெறும் போது, அவர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனங்களை அவர்களிடமே ஒப்படைக்கும் முறைமையை நிறுத்துமாறு அரச நிறுவனங்களுக்கு திறைசேரி உத்தரவு பிறப்பித்துள்ளது.

திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்த்தன இது தொடர்பான சுற்றறிக்கையை, அமைச்சு செயலாளர்கள் மற்றும் அரச வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

ஓய்வு பெறும்போது உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு மாற்றுவது தொடர்பில் அரச நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழு (கோப்) எழுந்த கேள்விகளையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாகனங்களை மாற்றுவதில் அரசுடைமை நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து உள் கொள்கைகளையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்த நிதி அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அந்நிய செலாவணி நெருக்கடி மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சில அரச நிறுவனங்கள் திறைசேரிக்கு தெரிவிக்காமல் வாகனங்களை மாற்றுவதற்கான ஆவணங்களை அனுப்பியிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார். வாகனத்தின் மதிப்புக் குறைப்புக்குப் பிறகு வாகனங்களை மாற்றுவதற்கு சில நிறுவனங்களின் பணிப்பாளர் சபை தீர்மானங்களை எடுத்துள்ளன.

சிரேஷ்ட அரச அதிகாரிகள், செயலாளர்கள், தங்களது ஓய்வு பெறும் வயதில் அவர்களது வாகனங்களை எடுத்துச் செல்வதை நிறுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானம் நடைமுறையில் இருந்த போதிலும் சில அரச நிறுவனங்கள் தமக்கான சொந்த கொள்கைகளை வகுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

# ஓரின சேர்க்கையாளர்களால் குரங்கம்மை பரவும் அபாயம்!

கொழும்பு, நவ. 07

குரங்கம்மை நோய் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களில் அதிகமாக பரவும் அபாயம் காணப்படுவதாக சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளுக்கு அமைய இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான செயல்பாடுகளை தவிர்ப்பதன் ஊடாக குரங்கம்மை பரவலை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள நோயாளர்களில் 99 சதவீதமானவர்களில் ஆண்கள் எனவும் அவர்களில் 95 சதவீதமானோர் ஓரின சேர்க்கையில் ஈடுபட்டவர்கள் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை குரங்கம்மையால் பாதிக்கப்பட்ட முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜெயலலிதா மரணம் குறித்த ஆறுமுகசாமி கமிஷன் அறிக்கை:

# மருத்துவமனையில் முழு கட்டுப்பாட்டையும் தனது கையில் எடுத்துக்கொண்டார் சசிகலா





சென்னை மடல்
-பகவான் சிங்-

**(நேற்றைய தொடர்ச்சி...)**

2016 செப்டம்பர் 22 அன்று ஜெயலலிதா அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதிலிருந்து, அவருடன் யார் இருக்கலாம், அவரை யார் சந்திக்கலாம், யார் சந்திக்கக்கூடாது போன்ற அனைத்து விவகாரங்களில் முழுக் கட்டுப்பாட்டையும் சசிகலா தன் கையில் எடுத்துக் கொண்டார். 'அக்கா'வைக் கவனித்த மருத்துவர்களிடம் விவரம் கேட்டறிந்ததும் அவர்தான். சிகிச்சை குறித்த அனைத்து முடிவுகளையும் எடுத்ததும் அவர்தான் என்பதும் ஊரறிந்த ரகசியம். இப்போது, ஆறுமுகசாமி கமிஷன் அறிக்கை வெளியானதையடுத்து, அதை மறுத்து, தான் மருத்துவத் துறை சாராத ஒருவர் என்பதால் எந்த முடிவையும் தான் எடுக்கவில்லை என்று கூறியுள்ளார் சசிகலா. ஆனால், அவரது நெருங்கிய உறவினரான டாக்டர் சிவகுமார் ஒரு மருத்துவர். சசிகலா சார்பில் சிகிச்சை குறித்த முடிவுகளை அவர் எடுத்துவந்தார். அரசு விசாரிக்கவேண்டிய நபர்கள் என்று ஆறுமுகசாமி அறிக்கை குறிப்பிட்டுள்ளவர்களில் இவரது பெயரும் அடக்கம்.

மூத்த அதிமுக தலைவர்களும் அமைச்சர்களும் கூட, அம்மாவைச் சந்திக்கத் தாங்கள் அனுமதிக்கப்படாதது குறித்தும், 'சின்னம்மா'தான் தகவல் வழங்கி வந்தார் என்பது குறித்தும் வேதனையுடன் முறையிட்டதையும் நான் மறக்கவில்லை. 2017 செப்ரெம்பர் 22 அன்று அப்போதைய வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சிறிநிவாசன் மதுரையில் ஒரு பொதுக் கூட்டத்தில், சசிகலாவுக்கு அஞ்சி, அதிமுக அமைச்சர்கள் 'அம்மா'வின் உடல் நிலை குறித்துப் பொய்யுரைத்ததாக ஒப்புக்கொண்டார்.

சசிகலாவும் அவர் குடும்பத்தினரும் அம்மா இட்லி சாப்பிட்டார் என்று எங்களிடம் கூறினால், நாங்கள் ஊடகங்களிடமும் வெளியுலகத்திடமும் அதையே சொன்னோம் என்றும் அவர் முறையிட்டார். இதையடுத்து எதிர்க்கட்சியான திமுகவின் செயல் தலைவராக இருந்த மு.க. ஸ்டாலின், இது குறித்து மத்திய அரசின் விசாரணை அமைப்பான சிபிஐ விசாரணை வேண்டும் என்று கோரினார். "மத்திய அரசு, எய்ம்ஸின் மூன்று மூத்த மருத்துவர்களை அப்போலோவிற்கு அனுப்பியது. மத்திய அரசுக்கு ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்துத் தெரியும். மேலும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் நட் டாவும் மத்திய அரசு ஜெயலலிதாவின் உடல் நிலை குறித்து உன்னிப்பாகக் கவனித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். ஜெயலலிதாவின் சிகிச்சைக்கு மத்திய அரசும் உதவியுள்ளதால், இதில் மறைந்திருக்கும் மர்மத்தை விடுவிக்கும் பொறுப்பும் அதற்கு உள்ளது" என்று ஸ்டாலின் அப்போது கூறினார். அப்போதைக்குச் சில மாதங்களுக்கு முன் நடந்த அரவக்குறிச்சி, தஞ்சாவூர், திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிகளின் இடைத்தேர்தல் வேட்பாளர்கள் குறித்த ஆவணங்களில் பதிக்கப் பட்ட ஜெயலலிதாவின் கட்டைவிரல் ரேகையின் உண்மைத் தன்மை குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார்.

### அறிக்கை தொடர்பில் முதல்வரின் நடவடிக்கை என்ன?

இட்லி சாப்பிட்டதுடன் மட்டுமல்ல, டில்லியில் நடந்த காவிரி நதி நீர் சர்ச்சைத் தீர்ப்பாயத்தின் முன் தமிழக அரசு சார்பில் சமர்ப்பிக்கப்படவேண்டிய அறிக்கையைக்கூட அவர் வாய்மொழிந்தார் என்றும், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார் என்றும்கூட அதிமுக அரசால் அன்று கூறப்பட்டது.

சர்க்கரை நோய் இருக்கும் ஜெயலலிதாவுக்கு இட்லி மட்டுமல்லாமல், அவருக்கு விருப்பமான இனிப்புகளும் ஐஸ்க்ரீமும்கூட அப்போலோ மருத்துவமனையிலேயே வழங்கப்பட்டதாக ஆறுமுகசாமி தனது அறிக்கையிலும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கேவலமான விவகாரம் குறித்த நீண்ட பதிவை நிறைவுசெய்யும் முன்னர், எனது 'சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள்' என்ற கருத்தை வலியுறுத்தச் சில சுவாரஸ்யமான அம்சங்களை உங்கள்முன் வைக்க விரும்புகிறேன். 2012 மார்ச் 28 அன்று சசி கலாவின் மன்னிப்பு அறிக்கை வெளியானது பற்றிக் குறிப்பிட்டேன். அதில், 'அக்கா'வுக்கு எதிராகச் சதி செய்த தனது உறவினர்களிடமிருந்து விலகி இருப்ப தாகக் கூறியிருந்தார். ஆனால், அந்த 'அக்கா' அப் போலோ

## கமிஷன் விசாரணையைக் கோரிய பன்னீர்செல்வம் விசாரணையில் சசிகலாவைப் பாராட்டினார்!

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, 2011 டிசம்பரில் போயஸ் தோட்ட இல்லத்தை விட்டு அவரால் வெளியேற்றப்பட்ட அதே கூட்டம் மருத்துவமனையில் அவரது அறையின் அருகிலேயே தங்க அறைகள் ஒதுக்கப்பட்டன. ஜெயலலிதாவின் உடல் ராஜாஜி மண்டபத்தில் பொது மக்கள் மரியாதைக்காக வைக்கப்பட்டிருந்தபோதும், இதே சசிகலா உறவினர்கள்தான், மலர் வளையங்கள் சூழ்ந்த பெட்டியைச் சுற்றி இருந்தனர், மூத்த அமைச்சர்களையும் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தனர்.

நான் இங்கு குறிப்பிட விரும்பும் இன்னொரு விஷயம், இந்த விசாரணை கமிஷன்கள் அரசியல் ரீதியாகச் செயல்படுவது குறித்துத்தான் அமைக்கப்படுவன, அவற்றுக்கான செலவு, அவை வெளியிடும் அறிக்கைகள் என எல்லாமே அரசியல் சார்பு கொண்டவையாகவும் அரசியல் ஆதாயத்தை நோக்கியும் உள்ளன. உதாரணமாக, அதிமுக மூத்த தலைவர் ஓ. பன்னீர் செல்வம் (ஓபிஎஸ்) விஷயம் - நீதிமன்றங்களில் ஊழல் வழக்கு நிலுவையில் இருந்தபோது முதல்வராக ஜெயலலிதா பதவியேற்க முடியாத நிலையில், இரு முறை இடைக்கால முதல்வராக இருந்தவர். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகும் அவரே முதல்வராக்கப்பட்டார். ஆனால், 2017 பெப்ரவரி 7 அன்று, தான் சசிகலா குடும்பத்தினரால் மோசமாக நடத்தப்பட்டதால், மரினாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் 'மௌன விரதம்' மேற்கொண்டு, தன் 'தர்ம யுத்தத்தைத் தொடங்கினார். 2016 டிசம்பர் 29 அன்று கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில், அடுத்த பொதுச் செயலாளராக சசிகலாவின் பெயரை முன்மொழிந்தவர் அவர்தான் என்பது குறிப்பிடத் தக்கது. சசிகலா, கட்சியின் கட்டுப்பாட்டைக் கையில் எடுப்பது, அடுத்து, முதல்வர் பதவியில் அமர்வதற்கான முதல் படி என்றுதான் பார்க்கப்பட்டது. எனினும், 2017 பெப்ரவரி 14 அன்று உச்ச நீதி மன்றம், சொத்துக் குவிப்பு வழக்கில் தனது தீர்ப்பை வழங்கியது.

அதில் சசிகலாவைக் குற்றவாளி என்று அறிவித்து, நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்ததுடன், ஜெயலலிதா மரணமடைந்துவிட்டதால் அவரை வழக்கிலிருந்து விடுவித்தது. பெங்களூரு சிறைக்குச் செல்லு முன், அவசரமாக, எடப்பாடி கே. பழனிச் சாமியை முதல்வராகப் பதவியேற்கச் செய்தார் சசிகலா.

இறுதியாக, ஈபிஎஸ் மற்றும் ஓபிஎஸ் அணிகள் இணைய முடிவு செய்தபோது, ஓபிஎஸ் விதித்த முதல் நிபந்தனை, அம்மாவின் சந்தேகத்துக்கிடமான மரணத்தை விசாரிக்க விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது நிபந்தனை, சசிகலா குடும்பத்தினரை முற்றிலுமாகக் கட்சியை விட்டு அகற்றவேண்டும் என்பது. இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு, ஒகஸ்ட் 2017இல் இரண்டு அணிகளும் ஒன்றிணைந்தன. ஆனால், இப்போது ஆறுமுகசாமி ஆணையத்தின் முன் ஓபிஎஸ், தான் சின்னம்மாமீது மிகுந்த மரியாதை கொண்டுள்ளதாகவும், மக்கள் மத்தியில் நிலவிய சந்தேகங்களை அகற்றவே விசாரணை கமிஷன் கோரியதாகவும் கூறியுள்ளார். அரசியல், அரசியல், அரசியல்! நாற்றமெடுக்கும் அரசியல்.

இப்போது சட்டப்பேரவையில் முன்வைக்கப்பட்ட ஆறுமுகசாமி அறிக்கை அடிப்படையில், முதல்வர் ஸ்டாலின் என்ன மேல்நடவடிக்கை எடுக்கப்போகிறார் என்று பார்க்கவேண்டும். திமுகவின் 2021 சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதிகளில் இந்த நடவடிக்கையும் ஒன்று. எப்படியாயினும், அரசியல் ரீதியாக, சசிகலா மீண்டும் கட்சியின் கட்டுப்பாட்டைக் கோரும் வாய்ப்பை இந்த அறிக்கை முடக்கியிருக்கிறது. அண்மைக்காலத்தில், மூத்த பாஜக தலைவர்கள் சிலர், அதிகமான நிதியைத் தன்வசம் வைத்திருக்கும் சசிகலா அணி உட்பட, அதிமுகவின் அனைத்து அணிகளும் ஒன்றிணைந்து, தங்களுடன் சேர்ந்து, திமுகவை எதிர்க்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர். ஆனால், இந்த அறிக்கைக்குப் பிறகு அப்படி ஒரு வாய்ப்பு சாத்தியமில்லாமல் போனது. சசிகலா வின் தேவர் சமுதாயத்தினரின் வாக்குவங்கியாக இருக்கும் தென் மாவட்டங்களில், கூடுதல் வாக்கு களைப் பெறமுடியும் என்ற ஆசை பாஜகவில் சிலருக்கு இருந்தது. "தமிழகத்தில் இரண்டு சதவிகித வாக்குகளைக் கூடுதலாகப் பெறலாம். ஆனால், மாநிலம் முழுவதிலும் மகளிர் வாக்குகள் 10-12 சதவிகிதம் வரை குறைந்துவிடும், காரணம், அம்மாவின் மரணம் குறித்துப் பெண்கள் பெரும ளவில் சசிகலாமீது கோபம் கொண்டுள்ளனர்" என்று மூத்த அதிமுக தலைவர் ஒருவர் கூறுகிறார்.

பல முறை ஜெயலலிதாவைச் சந்தித்து அவரின் பேட்டிகளைப் பிரசுரித்த நான், அவரின் முடிவையும், அதைப் பற்றி இதுபோல் எழுதவேண்டிய கட்டாயத்தையும் நினைத்து மிகவும் வேதனைப்படுகிறேன்.

சிறைத் தண்டனைத் தீர்ப்பு வரும் முன், சசிகலா, தன்னை ஜெயலலிதாவின் நகலாகவே பிரகடனப் படுத்திக்கொண்டு வந்தார். அக்காவை மருத்துவமனையில் சேர்த்து, அனைத்துச் சிகிச்சை முறைகளையும் மேற்பார்வை பார்த்து அவருக்கு இனிப்புகளும் ஐஸ்கிறீமும் வழங்கியதிலிருந்தே சின்னம்மாவின் உள் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் மக்கள் பார்வைக்கு, அக்காவைப் போலவே கொண்டை, உடை அணிந்ததுடன், பெரிய டயல் அணிந்து கைக்கடிகாரம் கட்டும் பாணி கூட, அக்கா போலவே இருப்பதைக் காட்டிக்கொண்டு வந்தார்.

அக்காவைப் போலவே, இரட்டை இலைச் சின்னத்தைக் குறிக்கும் வகையில் இரு விரல்களை உயர்த்தி, தன் அடிப்பொடிகள் அள்ளிக் கொண்டு வந்த கூட்டத்தைப் பார்த்துக் கையசைக்கும் பாணியையும் தனதாக்கிக்கொண்டார். ஆனால் பாவம், ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை வழங்கிய உச்ச நீதி மன்றத் தீர்ப்பு, புனித ஜார்ஜ் கோட்டை (மரினா கடற்கரையில் உள்ள மாநிலத் தலைமைச் செயலகத்தின் ஆட்சிக் கட்டில்) சிம்மாசனத்தில் அமரும் அவரது கனவைச் சிதறடித்தது.

# அமெரிக்காவை அச்சுறுத்தும் ஈரானின் அணு சக்தி வளர்ச்சியும்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

**ரஷ்யாவுடன் வலுவாக கைகோர்க்கும் ஈரானின் ட்ரோன் தானியங்கி ஏவுகணை உற்பத்தியால் ஐரோப்பிய – உக்ரேய்னிய போர்க்களத்தில் ரஷ்யாவை தோற்கடிக்க முடியாதோ என்று அமெரிக்கா அஞ்சுகிற வேளையில்,**

**அதேவேளை ஈரானின் அணு சக்தி வளர்ச்சியால் பிராந்திய வல்லரசாக ஈரான் அணு ஆயுத பலம் பெற்றால் அமெரிக்கவின் வளைகுடா இராணுவ மேலாண்மை குறைக்கப்படும் என வாஷிங்டன் ஐயமுறுகிறதோ என்பது பற்றிய ஆய்கிறது இக்கட்டுரை.**




**2000** களில், ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தின் வெளிப்பாடானது சமாதானமற்ற பயன்பாடுகளுக்கு இது நோக்கமாக இருக்கலாம் என்று அமெரிக்காவால் குற்றம் சாட்டப்பட்டது.

வாஷிங்டன் சார்பான ஈரானிய அதிருப்தி குழு ஈரானினால் மேற்கொள்ளப்பட்ட வரையறுக்கப் படாத அணுசக்தி நடவடிக்கைகளை குற்றம் சாட்டிய பின்னர் 2003 ஆம் ஆண்டில் ஐயுநுயு விசாரணை நடத்தப்பட்டது.

ஈரான் மேற்கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்தத்தை தக்கவைப்பதற்காக பல மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் சுமுகத் தீர்வு நெருங்கிவிட்டாலும், அணு சக்தி ஒப்பந்தத்தை தக்கவைப்பதற்கான பேச்சுவார்த்தையில், ஈரானிடம் சில அம்சங்களை ஐரோப்பிய யூனியன் பரிந்துரைத்திருந்தது. அதற்கு பதிலளித்து ஈரானும் தனது நிலைப்பாட்டை தெரிவித்து விட்டது. அதனை மேற்கத்திய நாடுகளும் ஏற்றுக் கொண்டுவிட்டன.

அதையடுத்து, அமெரிக்க டொனால்ட் ட்ரம்ப் அரசு அந்த ஒப்பந்தத்தை முறியடித்ததால் இந்த விவகாரத்தில் சுமுகத் தீர்வு ஏற்பட வாய்ப்பு நெருங்கவில்லை. இதன் விளைவே இன்றைய உலகின் முக்கிய விடயமாக ஈரானிய ட்ரோன் தயாரிப்பும், ரஷ்யா-ஈரான் ஆழமான உறவு பற்றி அமெரிக்கா அதீத கவனம் செலுத்த தொடங்கியுள்ளது.

**உக்ரேய்னில் ஈரான் ட்ரோன் தாக்குதல்:**

உக்ரேய்ன் தலைநகரில் இருவாரத்திற்கு முன் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரானிய ஆளில்லா விமானங்கள் - ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டதாக அமெரிக்கவும், உக்ரேய்னிய அரசும் தெரிவித்தன.

இதற்கு முன் ஈரான் ரஷ்யாவிற்கு மேற்பரப்பிலிருந்து மேற்பரப்பு ஷாஹெத்-136 உள்ளிட்ட ஏவுகணை- ட்ரோன்களை வழங்கியது.

அத்துடன் ஈரானின் சக்திவாய்ந்த புரட்சிகர காவலர்களின் இரண்டு மூத்த அதிகாரிகள் மற்றும் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் அதிகாரி ஆகியோர் ஆயுதங்களை வழங்குவது பற்றி ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மாஸ்கோவிற்கு வருகை தந்தபோது ஒரு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஈரானுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே சோல்ஃபகர் உட்பட குறுகிய தூர ஏவுகணைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஈரான் வழங்க ஒப்புக்கொண்ட ட்ரோன்களில் ஒன்று ஷாஹெட்-136 ஆகும், இது டெல்டா-சிறகுகள் கொண்ட ஆயுதம் “காமிகேஸ்” ஆகாயத்திலிருந்து மேற்பரப்பு தாக்குதல் விமானமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**ரஷ்யா-ஈரான் உறவு**

ரஷ்யா-ஈரான் இடையேயான உறவு என்பது ஆழ்ந்த கொள்கை பிடிப்பு அடிப்படையிலானது என்பதை விட, சூழ்நிலைகளை சார்ந்தே அமைந்துள்ளது. சிரியா போரிலும், இஸ்ரேலுடனான ரஷ்ய உறவுகளும் ஈரான் வேறுபட்ட நிலைப்பாட்டை கொண்டுள்ளது. ஆயினும் தற்போதய உக்ரேய்னிய போரில் ரஷ்யாவிற்கு குறுகிய தூர ஏவுகணைகளை ஈரான் வழங்குகிறது.

சமீபத்திய வாரங்களில் ஈரானில் தயாரிக்கப்பட்ட ஷாஹெட்-136 ட்ரோன்களைப் பயன்படுத்தி ரஷ்ய தாக்குதல்களை உக்ரேய்ன் தலைநகர் கீவ்வில் நடாத்தியது. ஆயினும் கிரெம் ளின் அதன் படைகள் ஈரானிய ஆளில்லா விமானங்களை உக்ரேய்னைத் தாக்க பயன்படுத்தியதை மறுத்தது.

## ரஷ்யாவுடன் கைகோர்க்கும் ஈரானின் ட்ரோன் உற்பத்தியும்

ஈரானிய ட்ரோன்களால் உக்ரேய்னிய அரசை அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும், உக்ரேய்னின் மின்சாரம் தயாரிக்கும் மற்றும் விநியோகிக்கும் கட்டமைப்பின் மீது தாக்குதல் தீவிரமாக நடத்தாப்பட்டது.

**ஈரான் அணுசக்தி திட்டம் :**

தற்போது அமெரிக்காவை அச்சுறுத்தும் ஈரானின் அணுசக்தி திட்டம் என்பது பல ஆராய்ச்சி தளங்கள், இரண்டு யுரேனியம் சுரங்கங்கள், ஒரு ஆராய்ச்சி அணு உலை மற்றும் மூன்று அறியப்பட்ட யுரேனிய செறிவூட்டல் நிலையங்கள் உள்ளிட்ட யுரேனியம் செயலாக்க வசதிகள் ஆகியவற்றை கொண்டது ஆகும்.

சர்வதேச அணுசக்தி அமைப்பின் சரிபார்ப்புக்கு உட்பட்டு அதன் அணுசக்தித் திட்டத்தை உருவாக்கியது. 1970 ஆம் ஆண்டில் ஈரான் அணு ஆயுத பரவல் தடை உடன்படிக்கையை ஒப்புக்கொண்டது.

அமெரிக்காவின் உதவியுடன் 1950 களில் சமாதான திட்டத்திற்கான அணுக்களின் பகுதியாக ஈரானின் அணுசக்தி திட்டம் பல ஆராய்ச்சி தொடங்கப்பட்டது. இதில் இரண்டு யுரேனியம் சுரங்கங்கள், ஒரு ஆராய்ச்சி அணுசக்தி மற்றும் யுரேனியம் செயலாக்க வசதிகள் ஆகியவை அடங்கும், இதில் மூன்று அறியப்பட்ட யுரேனிய செறிவூட்டல் நிலையங்கள் உள்ளன.

**அமெரிக்க உதவி பெற்ற ஈரான் :**

ஈரான் அணுசக்தி திட்டத்தில் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஐரோப்பிய அரசாங்கங்களின் பங்கு ஈரானின் ஷாவை கவிழ்த்த 1979 ஈரானிய புரட்சி வரை தொடர்ந்தது.

1979 புரட்சிக்குப் பின், ஈரானுடனான சர்வதேச அணுசக்தி ஒத்துழைப்பு மிகக் குறைக்கப்பட்டது. 1981 ல் ஈரானிய அதிகா ரிகள் நாட்டின் அணுசக்தி வளர்ச்சி தொடர வேண் டும் என்று முடிவு செய்தனர்.

1980 களின் பிற்பகுதியிலும், 1990 களின் முற்பகுதியில் அர்ஜென்டினாவிலும் பேச்சுவார்த்தைகள் பிரான்சுடன் நடந்தது, மேலும் உடன்பாடுகள் எட்டப்பட்டன.

1990 களில் ரஷ்யா ஈரானுடனான கூட்டு ஆராய்ச்சி அமைப்பு ஒன்றை உருவாக்கியது, ஈரான் ரஷ்ய அணு வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்ப தகவலுடன் ஈரானுக்கு அளித்தது. பின்னர் 2006 இல், ஈரானின் வேவு கடமைகளுடன் இணங்காததன் காரணமாக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஈரான் அதன் செறிவூட்டல் திட்டங்களை நிறுத்தி வைக்குமாறு கோரியது.

2007 ஆம் ஆண்டில், 2003 ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் ஈரான் ஒரு தீவிர அணு ஆயுதத் திட்டத்தை செயல்படுத்திவிட்டதாக ஐக்கிய நாடுகளின் தேசிய புலனாய்வு மதிப்பீடு அறிவித்தது.

நவம்பர் 2011 இல், ஐ.ஏ.ஏ.ஏ 2003 வரை ஒரு அணு குண்டு தயாரிப்பதற்காக ஈரான் சோதனைகளை நடத்தி வருவதாக நம்பகமான ஆதாரங்களை வெளியிட்டது, அந்த ஆய்வு பின்னர் அந்த நேரத்தில் ஒரு சிறிய அளவிலான ஆய்வு தொடர்ந்தது.

ஈரானின் முதல் அணுசக்தி ஆலை, புஷெர் 1 அணு உலை, ரஷ்ய அரசாங்க நிறுவனமான ரோசாம்மின் பிரதான உதவியுடன் நிறைவு செய்யப்பட்டு 2011 செப்டம்பர் 12 ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் புஷெர் அணு சக்தி நிலையம் முழு திறனை அடைந்துவிடும் என்று ரஷ்ய பொறியியல் ஒப்பந்தம் ஆட்டம்நெர் கோபிராம் தெரிவித்தது.

2015 ஆம் ஆண்டுக்குள், ஈரான் அணுசக்தி திட்டம் இழந்த எண்ணெய் வருவாயில் 100 பில்லியன் டாலர் செலவழித்து, சர்வதேச தடைகள் காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை இழந்தது.

தொடர்ந்து முன்னேறிய தெஹ் ரானிய அரசு 2018 ஆம் ஆண்டில் டிரம்ப் நிர்வாகத்தால் ஈரானில் அணு சக்தி தொடர்பான தடைகள் மீண்டும் அமலாக்கப்பட்டது. தொடர்ந்து பல தடைகளை தாண்டி ஈரான் புதிய 360 மெகாவாட் அணுசக்தி ஆலையில் டார்கோவினில் அமைக்கும் பணியில் ஈடுபடுவதாகவும் அறிவித்துள்ளது, எதிர்காலத்தில் மேலும் நடுத்தர அணு சக்தி நிலையங்கள் மற்றும் யூரேனிய சுரங்கங்களை இது தேடுகிறது.


ஈரானின் அணு சக்தி வளர்ச்சியை அமெரிக்கா தனக்கு அச்சுறுத்தலாகவும், பிராந்திய வல்லரசாக ஈரான் அணு ஆயுத பலம் பெற்றால் அமெரிக்கவின் வளைகுடா இராணுவ மேலாண்மை குறைக்கப்படும் என வாஷிங்டன் கருதுகிறது. இதே வேளை ரஷ்யாவுடன் ஆழமாக கைகோர்க்கும் ஈரானின் ட்ரோன் தானியங்கி ஏவுகணை உற்பத்தியால் ஐரோப்பிய - உக்ரேனிய போர்க்களத்தில் ரஷ்யாவை தோற்கடிக்க முடியாதோ என்றும் அமெரிக்கா அஞ்சுகிறது.




# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1)
2)
3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)

39. 

3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01)** **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........................................

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........................................

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........................................

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........................................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........................................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........................................

(6 புள்ளிகள்)

**02)** அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03)** **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........................................

(1 புள்ளி)

**04)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05)** **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

**07.11.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**07.11.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# காரைதீவு பொலிஸாரின் வருடாந்த அணிவகுப்பு!



கல்முனை, நவ. 07

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2022 ஆண்டுக்கான பரிசோதனை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செல்டன் ஜெகத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம் .ஜெயந்த ரத்னாயக்க கலந்து கொண்டு பொலிஸ் நிலையத்தை பார்வையிட்டார்.

மேலும் பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள், சுற்றுசூழல், பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளை பார்வையிட்டதுடன், பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

இதன்போது, காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு ஞாபகார்த்த கேடயம் ஒன்றையும் வழங்கினார். (ஐ-01)

# கால்நடைகளிடையே மர்மநோய் இரு வாரத்தில் 800 மாடுகள் பலி!

மட்டக்களப்பு, நவ.07

**மட்டக்களப்பில் மாடுகளிடையே பரவும் இனங்காணப்படாத நோய் காரணமாக கடந்த இரு வாரங்களில் 800இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழுந்தன என்று மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.**



மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய் தாக்கத்தால் சுவாசிக்க முடியாது அவை மாரடைப்பால் உயிரிழக்கின்றன. இதற்கு தடுப்பூசி வழங்கப்பட்டபோதும் வாயால் நுரைதள்ளி சுவாசிக்க முடியாது இறக்கின்றன என்று கூறபப்படுகின்றது.

வயல்வெளி, குளம், காடு மற்றும் மேய்ச்சல் தரை பகுதிகளில் உயிரிழந்த நிலையில் தினமும் குறைந்தது 10 மாடுகளின் உடலங்கள் மீட்கப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தன.

சித்தாண்டி மற்றும் கிரான் கால்நடை திணைக்களப் பிரிவுகளான சந்தனமடு ஆற்றுப் பகுதியை அண்டிய பகுதியான சித்தாண்டி 4ஆம் பிரிவு, ஈரளக்குளம், ஆலையடி, சேரடி, வேறம் பெரியவெட்டை, வட்டுவான், வெள்ளாமைச்சேனை, கூளாவடி, கோரவெளி, மாதந்தனை, மயிலந்தனை மேய்ச்சல் தரை பகுதிகளிலேயே இவ்வாறு மாடுகளின் உடலங்கள் மீட்கப்படுகின்றன. ஒரு வயது தொடக்கம் ஒன்றரை வயது வரையிலான, குட்டிஈனும் நிலையிலுள்ள எருமை, பசு மாடுகளே இவ்வாறு உயிரிழுந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

மாடுகளின் திடீர் இறப்பால் தாம் பெரும் துன்பங்களையும் நஷ்டத்தையும் எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் மாடு வளர்ப்போருக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# அருட்தந்தை வெபர் அடிகளின் உருவச்சிலை திறந்து வைப்பு!

மட்டக்களப்பு, நவ. 07

அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகளாரின் உருவச்சிலை வெபர் விளையாட்டு மைதானத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகளாளர் சமய , சமூக, கல்விப்பணிகளை ஆற்றினார். அத்துடன், விளையாட்டுத்துறையையும் கட்டியெழுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் வெபர் மைதானம் உருவாக அவர் ஆரம்பகர்த்தாவாக இருந்தார். 9 ஏக்கர் சதுப்பு நிலத்தை மைதானமாக மாற்றியவர் அவரே. அவரின் முயற்சியில் உருவான மைதானத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் தீர்மானத்துக்கு அமையசிலை அமைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, மட்டு. மாநகர முதல்வர் சரவணபவன், மாநகர சபை பிரதி முதல்வர் க. சத்தியசீலன், மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. சுஜாத்தா குலேந்திரகுமார், மட்டக்களப்பு மாநகர சபை உதவி ஆணையாளர் உ.சிவராசா, பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவில் பிறந்த வெபர் அடிகளார். மட்டக்களப்பில் சேவையாற்றி 1998 ஏப்ரல் 14ஆம் நாள் மட்டக்களப்பு மண்ணிலேயே உயிர்நீத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

இளம் பிக்குகள் துஷ்பிரயோகம்:

# தலைமை பிக்குவின் கோரிக்கை நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது!

கல்முனை, நவ. 07

இளம் பிக்குகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு பல நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டட பிரதம பிக்குவின் பிணை நிபந்தனை தளர்வு கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அத்துடன், இந்த வழக்கு எதிர் வரும் டிசெம்பர் 6ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. கல்முனை நீதி வான் நீதிமன்றம்.

அம்பாறை - கல்முனையில் விகாரை ஒன்றில் 3 இளம் பிக்குகள் பிரதம பிக்குவால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோரின் முறைப்பாட்டின் அடிப்படையில் கடந்த ஓகஸ்ட் மாதம் தலைமை பிக்கு கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் நடந்த விசாரணையில் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் வழக்கு டிசெம்பர் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதன்போது பிரதான சந்தேகநபரான தலைமை பிக்கு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை அவர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது. அத்துடன், வெளிநாடு செல்லவும் தடைவிதிக்கப்பட்டது. இந்த உத்தரவுகளில் தலைமை பிக்கு தளர்வுகளை கோரினார். இதற்கு நீதிமன்றம் அனுமதி மறுத்துவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-01)

# வெள்ளத்தால் பயிர் அழிவு ஏற்படாமலிருக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, நவ. 07

எருவில்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 7,000 விவசாய நிலங்களை வெள்ளத்தால் அழிவடையாமல் தடுக்க பெரியகல்லாறு ஊடாக கடலை சென்றடையும் வாவியின் முகத்துவார பகுதியை அகழ்வதற்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் சி. ந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் திட்டத்துக்கான நிதியை தனது சொந்த நிதியிலிருந்து ஒதுக்குவதாக இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் குறிப்பிட்டார். (ஐ)

# பின்புறம் வந்த வாகனம் மோதி மனைவி பலி; கணவன் காயம்!

## வாழைச்சேனையில் சனி இரவு சம்பவம்

பின்புறமாக வந்த படிரக வாகனம் மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த தம்பதியரில் மனைவி உயிரிழந்தார். கணவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 9.30 மணி யளவில் மட்டக்களப்பு - வாழைச்சேனை - பாலைநகர் பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில், ஐந்து பிள்ளைகளின் தாயான 46 வயதுடைய உசனார் ஆமினா உம்மா என்பவரே உயிரிழந்தார். அவரின் கணவரான ஆதம் பாவா உசனார் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வாழைச்சேனையிலுள்ள மகளின் வீட்டுக்கு சென்றுவிட்டு பாலைநகரிலுள்ள தங்கள் வீட் டுக்கு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ள வாழைச்சேனை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஹிஜாப்புக்கு எதிரான போராட்டம் 277 பேர் மரணம் 14,000 பேர் கைது!

தெஹ்ரான், நவ. 07

**ஈரானில் தொடர்ந்து நடைபெற்று வரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தால் இதுவரை 277 பேர் உயிரிழந்தனர். 14 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

ஈரானில் மனித உரிமைகள் மீறல் குறித்து ஐ.நா. குழுவைச் சேர்ந்த ஜாவத் ரஹ்மான் கூறும்போது,

"கடந்த 6 வாரங்களாக ஈரானில் நடக்கும் ஹிஜாப் எதிர்ப்பு போராட் டத்தில் சமூக செயல்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், சட்ட மாணவர்கள் என இதுவரை 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட் டுள்ளனர். ஈரானின் படையினர் நடத்திய தாக்குதலில் 277 பேர் பலியாகினர். ஆயிரக் கணக்கானோர் காயமடைந்தனர்" என்றார்.

ஈரானின் போராட்டக்காரர்கள் மீது நடத்தும் வன்முறையை கைவிட வேண் டும் என்று அந்த நாட்டு அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபை பலமுறை அறிவுறுத்தியுள்ளது.

ஈரானில் 9 வயது சிறுமி முதல் வயதான பெண்கள் வரை ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டது. ஹிஜாப்பை சரியாக அணியவில்லை என்று கூறி பொலிஸார் தாக்கியதில் அமனி என்பவர் கடந்த செப்ரெம்பர் 16ஆம் திகதி உயிரிழந்தார்.




இதைத் தொடர்ந்து அங்கு ஹியாப்புக்கு எதிரான போராட்டம் அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவில் தீ விபத்து 15 பேர் உயிரிழப்பு!

மொஸ்கோ, நவ. 07

ரஷ்யாவில் மதுபான விடுதியொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்த பட்சம் 15 பேர் உயிரிழந்தனர்.

கொஸ்ட்ரோமா நகரில் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தின்போது சுமார் 250 பேர் மேற்படி கட்டடத்திலிருந்து வெளி யேற்றப்பட்டனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## பிலடெல்பியாவில் 12 பேர் படுகாயம்!

பிலடெல்பியா, நவ. 07

அமெரிக்காவில் பிலடெல்பியா மாகாணத்தில் கென்சிங்டன் பகுதியில் மதுபான விடுதிக்கு வெளியே நடந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 12 பேர் காயம் அடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விடுதிக்கு வெளியே நின்றிருந்த மர்ம நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தினர். இதில் 12 பேர் காயம் அடைந்து உள்ளனர்.

அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## 40 ஆண்டுகளில் இல்லாத வறட்சி கென்யாவில் வன உயிர்கள் பலி!

### - 205 யானைகள் இறந்தன -

நைரோபி, நவ. 12

கென்யாவில் 40 ஆண்டுகளில் இல்லாத வறட்சி நிலவி வருகிறது. இதனால், ஏராளமான வன உயிர்கள் பலியாகி வருகின்றன. இந் நிலையில், அங்கு 205 யானைகள் பலியாகின என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த பெப்ரவரி - ஒக்ரோபர் மாதங்களுக்கு இடையையே இந்த யானைகள் உட்பட பல உயிர்கள் உயிரிழந்தன.

கிழக்கு ஆபிரிக்காவின் பெரும்பகுதி 40 ஆண்டுகளில் இல்லாத வறட்சி நிலவி வருகிறது.



இப்பகுதியில் ஆங்காங்கே மழை பெய்யத் தொடங்கினாலும், கென்யாவின் வானிலை ஆய்வுத் துறை, வரும் மாதங்களில் நாட்டின் பெரும்பகுதிக்கு சராசரிக்கும் குறைவான மழை பெய்யும் என்று கணித்துள்ளது. இதனால் கென்யாவின் வனவிலங்குகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் முடிந்துவிடவில்லை என்ற அச்சம் ஏற்படுகிறது.

உணவு மற்றும் நீர் பற்றாக்குறை காரணமாக வனவிலங்குகள் இறந்துள்ளன. கிழக்கு ஆபிரிக்காவின் மிக மோசமான வறட்சியால் கென்ய வனவிலங்கு பாதுகாப்பில் இருந்த யானைகள் மற்றும் வரிக்குதிரைகள் உள்பட நூற்றுக்கணக்கான விலங்குகள் இறந்துள்ளன.

கடந்த ஒன்பது மாதங்களில் 205 யானைகள், 512 காட்டெருமைகள், 381 பொதுவான வரிக்குதிரைகள், 51 எருமைகள், 49 வரிக்குதிரைகள் மற்றும் 12 ஒட்டகச் சிவிங்கிகள் இறந்தன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கென்யாவின் சில பகுதிகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் போதிய தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால், மக்கள் மற்றும் வனவிலங்குகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கென்யா சுற்றுலாத்துறை தண்ணீர் இல்லாத பகுதிகளில் உள்ள வனவிலங்குகளுக்கு தண்ணீர், உணவு வழங்க ஏற்பாடு செய்து வருகிறது.

## ருவிற்றரில் நீல குறிகாட்டிக்கு கட்டணை நடைமுறை அமுலானது

வாஷிங்டன், நவ. 07

ருவிற்றர் அறிமுகப்படுத்தும் நீல நிற குறிகாட்டிக்கு கட்டணம் அறவிடும் நடைமுறை நேற்று முதல் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் நடைமுறைக்கு வந்தது.

ருவிற்றர் சமூகவலைதளத்தை உலகின் முதல் பணக்காரரான எலான் மஸ்க் வாங்கியுள்ளார். அவர் 44 பில்லியன் டொலர்கள் கொடுத்து இந்த நிறுவனத்தை வாங்கினார்.

ருவிற்றர் நிறுவனம் அளிக்கும் நீல நிற குறியீட்டுக்காக மாதம் 8 டொலர்கள் அறவிடப்படும் என்று அவர் கூறியிருந்தார்.

இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

ஆனாலும், நேற்று முதல் நீல நிற குறிகாட்டி வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுகளில் இந்த சேவை முதன்முதலில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

## மனைவி உட்பட ஐவரை சுட்டு கொன்ற கணவர்!

### அமெரிக்காவில் கொடூரம்!



வாஷிங்டன், நவ. 07

கருத்து வேறுபாட்டால் தாயாரின் வீட்டுக்கு சென்ற மனைவியை தேடிச் சென்ற கணவர் நடத்திய துப்பாக்கி சூட்டில் மனைவி, அவரின் தாய் உட்பட நால்வர் உயிரிழந்தனர். இறுதியில் அவரும் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவம் அமெரிக்காவின் மேரிலேட் மாகாணத்தில் நடைபெற்றதுள்ளது.

அன்ட்றூ சேல்ஸ் (வயது 28). இவரின் மனைவி சாரா மென் (வயது 21). மென்னின் தாயார் சொம்லி மென் (வயது 48), மென்னின் சகோதரன் கை மென் அவர்களின் குடும்ப நண்பரான ஜோவென் வட்ஸன் (வயது 23) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

மனைவியை தேடி வீட்டுக்கு வந்த அன்ட்றூவுக்கும் சாராவுக்கும் இடையே வாக்குவாதம் முற்றியதில் இந்த துப்பாக்கி சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கி சூட்டில் அனைவரும் உயிரிழந்த நிலையில் அவர்களின் உடல்களை அன்ட்றூ கத்தியால் குத்தியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. பின்னர் தன்னைத்தான சுட்டுக் கொண்டார் என்றும் அறிய வருகின்றது.

எனினும், அவர்கள் இருவரின் இரு பிள்ளைகளும் பாதுகாப்பாக பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பைடன் கவலையும் அதிர்ச்சியும் வெளியிட்டுள்ளார்.

(ஐ)

# சுருண்டது சிம்பாப்வே; அரையிறுதியில் இந்தியா!



மெல்பர்ன், நவ. 07

சிம்பாப்வே அணிக்கு எதிரான இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் தனது அரையிறுதியை உறுதி செய்தது.

20 ஓவர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. சுப்பர் 12 சுற்றின் நேற்றைய போட்டியில் இந்தியா - சிம்பாப்வே அணிகள் மோதின. இதில், நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி அணிக்கு ரோஹித் சர்மா - கே.எல்.ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது. 3 ஓவர் வரை 18 ஓட்டங்கள் சேர்த்த இந்த இணையை முசரபானி பிரிக்க ரோஹித் சர்மா 15 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து களத்துக்கு வந்த விராட் கோலி - கே. எல். ராகுலுடன் கைகோத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

கே. எல். ராகுல் அதிரடி காட்டிக்கொண்டிருந்த போது, 12ஆவது ஓவரில் பிடிகொடுத்து ஆட்டமிழந்து 26 ஓட்டங்களுடன் களத்திலிருந்து நடையைக் கட்டினார் கோலி. அவர் சென்ற சிறிது நேரத்தில் அதிரடி காட்டிக்கொண்டிருந்த ராகுல் 35 பந்துகளில் 51 ஓட்டங்களை குவித்துவிட்டு பெவிலியன் திரும்பினார்.

அடுத்து வந்த ரிஷப் பந்த் 3 ஓட்டங்களில் கிளம்பினார். இதனால் 15 ஓவர் முடிவில் இந்தியா 4 விக்கெட்களை இழந்து 107 ஓட்டங்களை சேர்த்திருந்தது. இவர்களைத்தொடர்ந்து வந்த ஹார்திக் பாண்ட்யா - சூர்யகுமார் யாதவ் இணை அணிக்கு பலம் சேர்த்தது. கடைசி ஓவரில் ஹார்திக் 18 பந்துகளில் 18 ஓட்டங்களை சேர்க்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்களை இழந்த இந்திய அணி 186 ஓட்டங்களை சேர்த்தது.

சூர்யகுமார் யாதவ் 61 ஓட்டங்களுடனும், அக்சர் பட்டேல் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

சிம்பாப்வே அணி தரப்பில் ஷேன் வில்லியம்ஸ் 2 விக்கெட்களையும், சிக்கந்தர் ரஸா, ரிச்சர்ட், முசர்பானி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

187 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு ரெஜிஸ் ஜக்பவா - கிரேக் எர்வின் இணை தொடக்கம் கொடுத்தது.

மோசமான தொடக்கத்தைக் கொடுத்த இந்த இணையை 2 ஓவரிலேயே அர்ஷ்தீப் சிங் வெளியேற்றினார். தொடக்கத்திலிருந்த அந்த அணியின் பொறுப்பற்ற ஆட்டத்தால் வெஸ்லி (0), சீன் வில்லியம்ஸ் (11), கிரேக் எர்வின் (13), டோனி முன்யோங்கா (5) என சொற்ப ஓட்டங்களில் களம் வந்ததும் பெவிலியன் திரும்பினர். இதனால் 10 ஓவர்கள் முடிவிலேயே அந்த அணி 5 விக்கெட்களை இழந்து 59 ஓட்டங்களை மட்டுமே சேர்த்திருந்தது.

வருவதும் போவதுமாக இருந்த வீரர்களுக்கு இடையே ரியான் பேர்ள் 35 ஓட்டங்களை சேர்த்து தனக்கான பங்களிப்பை கொடுத்துவிட்டு வெளியேறினார். 15 ஓவரில் வெலிங்டன் மசகட்சா (1), ரிச்சர்ட் (1) வந்ததும் வெளியேற அணியின் நிலைமை மோசமடைந்தது. 35 ஓட்டங்களை சேர்த்து இந்திய வீரர்களின் பந்துவீச்சில் தாக்குப்பிடித்துக் கொண்டிருந்த சிக்கந்தரும் வெளியேறவே சிம்பாப்வே நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 115 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

இதன் மூலம் இந்திய அணி 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி தரப்பில் அஸ்வின் 3 விக்கெட்களையும், ஹார்திக் பாண்ட்யா, ஷமி தலா 2 விக்கெட்களையும் புவனேஷ்குமார், அர்தீப் சிங், அக்சர் படேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

## பாகிஸ்தான் அணியும் அரையிறுதிக்கு தகுதி!

அடிலெய்ட், நவ. 07

அடிலெய்டில் நடைபெற்ற உலகக்கிண்ண இருபது 20 - போட்டியில் பங்களாதேஷ் அணியின் அரையிறுதி கனவை தகர்த்தது, பாகிஸ்தான் அரையிறுதிக்குள் நுழைந்தது.

நேற்று நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

11ஆவது ஓவரில் 73 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் என்ற வலுவான நிலையிலிருந்து ஷஹீன் அப்ரிடி, ஷதாப் கான் பந்து வீச்சில் சீட்டுக்கட்டு போல் சரிந்து, 20 ஓவர்களில் 127 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்கள் என்று முடிந்தது.

தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான், 18.1 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 128 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி, லிட்டன் தாஸ் விக்கெட்டை ஆரம்பத்திலேயே இழந்தது. லிட்டன் தாஸ் ஒரு சிக்ஸர் விளாசி 10 ஓட்டங்களில் ஷகீன் அப்ரிடியின் பந்தை அடித்தாடி முயன்று ஷோன் மசூதிடம் பிடி கொடுத்து வெளியேறினார். 3ஆவது ஓவரில் 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் என்ற நிலையிலிருந்து தொடக்க வீரர் ஷாண்ட்டோவும் சௌமிய சர்க்காரும் அடித்தாடினர்.

11 ஓவர்களில் 73 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்தபோது சௌமிய சர்க்கார் 20 ஓட்டங்களில் ஷதாப் கான் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தே அணித் தலைவர் ஷகீப் உல் ஹசன் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த சாண்டோ அருமையாக ஆடி 7 பௌண்ட்ரிகளுடன் 48 பந்துகளில் 54 ஓட்டங்கள் எடுத்து போல்ட் ஆகி வெளியேறினார்.

இறுதியில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 127 ஓட்டங்களை பங்களாதேஷ் எடுத்தது.

128 ஓட்டங்கள் ஒன்றும் பெரிய விஷயமல்ல. ரிஸ்வானும், பாபர் அசாமும் தெளிவாக ஆடி 10 ஓவர்களில் 57 ஓட்டங்களை நிதானமாக சேர்த்தனர். பாபர் அசாம் 25 ஓட்டங்களில் வெளியேறினார். ரிஸ்வான் 32 பந்துகளில் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 32 ஓட்டங்கள் எடுத்து அபொட் ஹூசைனிடம் வீழ்ந்தார்.

15வது ஓவரில் 92 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்கள் என்று இருந்தது பாகிஸ்தான். ஆனால், அதன் பிறகு அதிரடியாக ஆடிய முகமது ஹாரிஸ் இறங்கி 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 18 பந்துகளில் 31 ஓட்டங்களை விளாச, ஷோன் மசூத் 14 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்து பாகிஸ்தானை வெற்றிக்கு இட்டு சென்றனர்.

18.1 ஓவரில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான் வெற்றி பெற்றது.



## பெண்மீது வன்புணர்வு தனுஷ்க ஆஸியில் கைது!



சிட்னி, நவ. 07

பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை அணியின் தனுஷ்க குணதிலக அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருபது - 20 உலகக்கிண்ணத் தொடருக்காக இலங்கை அணி அவுஸ்திரேலியாவில் உள்ளது. இந்த அணியில் குணதிலகவும் இடம்பெற்றிருந்தார். எனினும், தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் அணியிலிருந்து விலக்கப்பட்டாலும் அவுஸ்திரேலியாவிலேயே தங்கியிருந்தார்.

இந்நிலையில், டேட்டிங் செயலி மூலம் நட்பான பெண் ஒருவரை குணதிலக கடந்த புதன்கிழமை சந்தித்துள்ளார். அன்றைய தினம் அவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் றோஸ் பே என்ற இடத்திலுள்ள முகவரியில் அவுஸ்திரேலிய பொலிஸார் சோதனைகளை நடத்தினர்.

இந்நிலையில், தனுஷ்க குணதிலகவை கைது செய்துள்ள பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபையும் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்துள்ளது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் தனுஷ்கவுக்கு குறைந்தது 14 ஆண்டுகளாவது சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். இதேசமயம் இலங்கை கிரிக்கெட் சபையும் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிய வருகின்றது.

2015ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான தனுஷ்க இலங்கை அணிக்காக 8 டெஸ்ட், 47 ஒருநாள், 46 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மலையகத்தில் கடும் மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு!





ஹற்றன், நவ.07

**மலையகத்தின் பல பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.**

கடும் மழை காரணமாக ஹற்றன் நகரின் வீதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ள காரணமாக வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

வீதிகளில் அதிக பனிமூட்டம் நிலவுவதால் வாகன சாரதிகளை அவதானமாக செயல்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை வரையான பகுதிகளில் பல சிறு மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. வீதி வழுக்கும் நிலையும் அதிகரித்து காணப்படுவதால் இந்த வீதியை பயன்படுத்துவபவர்கள் அவதானமாக செயல்படுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆற்றில் தவறிவீழ்ந்து 10 வயது சிறுமி மரணம்!

நுவரெலியா, நவ. 07

வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்பியபோது ஆற்றைக் கடந்தபோது தவறிவீழ்ந்ததில் 10 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெதமுல்ல கெமினிதென் தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் கெமினிதென் தோட்டத்தைச் சேர்ந்த யோகராஜா அனுஷா வயது என்ற சிறுமியே உயிரிழந்தார்.

சிறுமி ஆற்றில் விழுந்ததைக் கண்ட பொதுமக்கள், தண்ணீரில் இழுத்து செல்லப்பட்ட சிறுமியை மீட்டு நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும், சிறுமி வழியிலேயே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கொத்மலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## எரிபொருள் தாங்கி வாகன விபத்தில் சாரதி உயிரிழப்பு



கம்பளை, நவ. 07

புசல்லாவை - எல்பொட தோட்டப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை எரிபொருள் தாங்கி வாகனம் விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி சம்பவ இடத்திலேயே பலியானார்.

இதில், திருகோணமலை, 05 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எஸ்.பி. துசிந்த (வயது - 43) என்பவரே இதில் உயிரிழந்தார்.

திருகோணமலையிலிருந்து கம்பளை - புசல்லாவை எல்பொட தோட்டத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைக்கு தேவையான 6600 லீற்றர் டீசலை வழங்கிவிட்டு, கம்பளை நோக்கி சென்றபோது அதிகாலை 2 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சீரற்ற காலநிலையால், வீதியல் ஏற்பட்ட வழுக்கல் தன்மையால் சாரதியின் கட்டுப்பாட்டைமீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அந்த வாகனத்தில் 13,200 லீற்றர் டீசல் இருந்ததாக தெரிய வந்துள்ளது. (ஐ)

## அக்குறணை நகரம் வெள்ளத்தில் மூழ்கியது!

கண்டி, நவ. 07

மலையகத்தில் நேற்றுமுன்தினம் தொடக்கம் பெய்துவரும் கடும் மழை காரணமாக கண்டி- யாழ்ப்பாணம் ஏ09 வீதியின் அக்குறணை நகர் நீரில் மூழ்கியது.

அக்குறணை நகருக்கு அண்மித்து ஓடும் இரு ஆறுகள் பெருக்கெடுத்ததாலேயே அக்குறணை நகர வீதிகள் நீரில் மூழ்கின. இதனால் பல மணித்தியாலங்கள் வாகனப் போக்குவரத்துக்கும் தடை ஏற்பட்டது. (ஐ)



## இளம் குடும்பஸ்தரான தமிழர் அடித்து கொலை!

நுவரெலியா, நவ. 07

தெல்தோட்டை லிட்டில் வெளியில் வீடொன்றில் வைத்து இளம் குடும்பஸ்தர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு கொலையானவர் தலவாக்கலையை சேர்ந்த லட்சுமணன் ராஜேந்திரன் (வயது 24) என்று இனங் காணப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கூலித் தொழிலாளியான இவர் தனது மனைவியின் வீட்டில் தங்கியிருந்து தொழி லில் ஈடுபட்டுள்ளார். உறவினர் ஒருவரின் வீட்டு நிகழ்வுக்காக மாமனாருடன் சென்றிருந்தார்.

இந்நிலையில், நிகழ்வு நடைபெற்ற வீட்டுக்கு அருகே மறுநாள் காலை காயங்களுடன் மீட்கப்பட்டார். அவர் தெல்தோட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சிவனொளிபாதமலை யாத்திரை முன்னாயத்தக் கூட்டம் நாளை!

ஹற்றன், நவ. 07

எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி பௌர்ணமி தினத்துடன் சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பமாகிறது. இது தொடர்பான ஆயத்தக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை நல்லதண்ணி நகரிலுள்ள பௌத்த மண்டபத்தில் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சிவனொளிபாத மலைக்கு பொறுப்பான பீடாதிபதி பெங்கமு தம்மதின்ன தேரர் கலந்து கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிப்பார்.

இந்தக் கலந்துரையாடலில் ஹற்றன் அரச பேருந்து நிலைய அதிகாரி, தனியார் பேருந்து நிலைய அதிகாரி, ஹற்றன் புகையிரத நிலைய அதிகாரி, மின்சார சபை அதிகாரி, தேசிய நீர் துறை அதிகாரி, வனத்துறை அதிகாரி, விலை கட்டுபாட்டு அதிகாரி, பொதுச் சுகாதார அதிகாரி எனப் பல்வேறு அரச, தனியார் துறையினர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## கால்துடைப்பம் விற்பதாக நடித்து ஹெரோயின் விற்றவர் சிக்கினார்

கண்டி, நவ. 07

கால் துடைப்பம் விற்கும் போர்வையில் போதைப்பொருளை விற்பனை செய்த ஒருவரை கண்டி ஊழல் ஒழிப்பு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் தென்னகும்புர பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரின் கால்துடைப்ப பொதிக்குள் இருந்து 240 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த நபர் தனக்கு நன்கு தெரிந்தவர்களுக்கு மாத்திரமே தினமும் ஹெரோயினை விற்பனை செய்து வந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

## விக்ரோறியா நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறந்தன!

கண்டி, நவ. 07

விக்ரோறியா நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகளில் 6 கதவுகள் தன்னியக்க அடிப்படையில் திறந்துள்ளன.

மகாவலி நீரேந்து பகுதிகளில் நேற்றுமுன்தினம் முதல் பெய்து வரும் கடும் மழையால் மேற்படி வான் கதவுகள் தன்னியக்கமாக நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் திறந்தன என்று விக்ரோறியா நீர்தேக்க கடமை நேர பொறியியலாளர் வசந்த ஹெகலபிட்டிய தெரிவித்தார்.

இதேவளை விக்ரோறியா நீர்த்தேக்கத்தின் தன்னியக்க வான்கதவுகள் இரண்டு கடந்த முதலாம் திகதி அதிகாலை திறந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.



அத்துடன், தற்போது நீர்த்தேக்கத்தில் 80 வீத அளவில் நீர் தேக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## தமிழ்...

விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இனப் பிரச்னை தீர்வுக்காக தமிழ் கட்சிகள் ஓரணியில் வரவேண்டும் என்று கூறியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் முகமாக சுரேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு,

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகள் பாராளுமன்றங்களில் முன்வைக்கப்பட்ட போது, அதை எதிர்த்தவர்கள் யார் என்ற வரலாற்றை இந்த நாடே அறியும். பல தசாப்தங்களாக ஆளும் கட்சிகள் ஒரு தீர்வைக் கொண்டு வருகின்ற போது சிங்கள எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளார்கள்.

எதிர்க்கட்சிகள் தமிழர்களுக்கான தீர்வுக்கு ஆதரவு தெரிவிக்கின்றபோது ஆளும் கட்சிக்குள் இரண்டாகப் பிரிந்து நின்று அதை எதிர்ப்பார்கள். தமிழ் மக்களுக்கு ஆலோசனை சொல்பவர்கள் இலங்கை அரசியலில் பிரதானியாக, தலைவராக, அமைச்சராக பதவியில் இருந்தபோது நடைபெற்ற விடயங்களே அதற்கு சான்றாக அமையும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் மகிந்த ராஜபக்ஷ அரசு காலத்தில் தமிழ் மக்களால் ஏகோபித்துத் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளை தீர்வு காண பேச்சுக்கு அழைத்த ஜனாதிபதி இறுதி வரை அவர்களுடன் பேச்சு நடத்தாமலே தவிர்த்து வந்தார். அப்போது அந்தக் கட்சியின் முக்கிய தலைவராக அமைச்சராகப் பதவியில் இருந்தவரே நிமால் சிறிபால டி சில்வா.

இதேபோன்று நல்லாட்சி அரசாங்க காலத்தில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு உள்ளடங்கியதாக ஒரு புதிய அரசியல் யாப்பு முன்வைக்கப்படுவதாக இருந்தது. அந்த நேரத்தில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தி பாராளுமன்றத்தில் இருந்த பெரும்பான்மையை சிதைத்து அரசியல் யாப்பு நிறைவேறாமல் குழப்பம் விளைவித்தது சிங்கள கட்சிகளே. தமிழர்கள் அல்ல என்பதையும் கோடிட்டு காட்ட விரும்புகிறோம். அப்போதும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர் அந்தத் தரப்பில் மூத்த அமைச்சராக பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ஏற்கனவே அரசியல் யாப்பிலே இருக்கக்கூடிய அதிகாரங்களை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவதற்குக்கூட சிங்களக் கட்சிகள் ஒற்றுமையாக முன் வருவார்களா? அதில்கூட தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டு விடக்கூடாது என்பதற்காக பிரிந்து நின்று குரல் கொடுப்பவர்கள் சிங்கள கட்சிகளே.

இன்னும் வரலாற்றில் சிறிது தூரம் பின் சென்றால் 1987இல் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையை அப்போது, ஆளும்கட்சியில் இருக்கும் ஒரு பகுதியினர் எதிர்க்கட்சியோடு சேர்ந்து நின்று எதிர்த்தார்கள். அது தமிழர்களுக்கான தீர்வு அல்ல. ஆனால், குறைந்தபட்ச அதிகாரங்கள்கூட தமிழர்களுக்கு கிடைத்து விடக்கூடாது என் பதில்தான் சிங்களக் கட்சிகள் குறியாக இருந்தன.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சமஷ்டி முறையில் அமைய வேண்டும் என்பதில் தமிழ் மக்களும் அரசியல் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளோம். அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான அழைப்பு எந்த அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டாலும் சமஷ்டி முறையிலான தீர்வையே தமிழ் மக்களின் அனைத்துத் தரப்பினரும் அரசியல் தீர்வாக முன்வைத்திருப்பதை மீண்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நிறைவேற்றுவதற்கு சிங்கள கட்சிகள் ஓர் அணியில் வருவதே பிரதானம். ஆகவே, அவர்களை ஓரணியில் வருமாறு கோரிக்கை முன்வைக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## 150 இலங்கை...

இந்த முகவர்கள், எங்கள் ஒவ்வொருவர் சார்பாகவும் சுமார் 18 இலட்சம் ரூபாயை வாங்கிக் கொண்டே எங்களை அடிமைகளாக விற்றிருக்கிறார்கள்.

கையில் கடவுச்சீட்டும் இல்லை. அதனையும் பறித்துக் கொண்டார்கள். இதனால் நாங்கள் எங்களது நாட்டுக்குத் திரும்ப முடியாதுள்ளது. தொடர்பாடல் எதுவுமே இல்லாமல் தொடர்பு கொள்ளக்கூடிய கைபேசிகள் இல்லாமல் நாம் பாவிக்க முடியாதுள்ளோம்

சம்பளம் இல்லை. சாப்பாட்டுக்கு வழியில்லை. சவர்க்காரம் வாங்கக் வாங்கக்கூட கையில் காசு இல்லை. நாங்கள் பரம ஏழைகள் என்றபடியால்தான் இங்கு வீட்டுப் பணிப்பெண்களாக வந்தோம். நாங்கள் அனைவரும் பெண்கள். இங்கே சுகாதார வசதிகளும் பாதுகாப்பும் அற்ற சூழ்நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதால் நாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளோம். மாற்றிக் கொள்ள ஆடைகள் கூட இல்லாது அவஸ்தைப்படுகின்றோம் எமது விடயத்தில், மனித உரிமைகள் அமைப்புகள், பெண் உரிமை அமைப்புக்கள் இந்த மோசடியை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தலையிட்டு எமக்கு கருணை காட்ட வேண்டும் - என்று கூறியுள்ளனர். (ஐ)

## தமிழ் அரசின்...

அத்துடன், அவரின் தீர்மானத்துக்கு எதிராக செயல்படப் போவதாகவும் டான் தொலைக்காட்சியின் ஸ்பொட்லைற் நிகழ்ச்சிக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கொழும்பு கிளை தலைவர் கே. வி. தவராசாவும் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சில விடயங்களை பகிரங்கமாக விமர்சித்திருந்தார். இது மேலும் உட்கட்சி மோதலை தூண்டியிருந்தது. இந்நிலையிலேயே கட்சியின் மத்திய செயல்குழு கூட்டம் கூட்டப்படவுள்ளது. (ஐ)

## தேர்தலை...

மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் வே. சிவயோகன் நினைவேந்தல் நிகழ்வு நேற்று வடமராட்சி - அல்வாய் சிறீலங்கா பாடசாலையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பழைய தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் மீண்டும் ஓர் எல்லை நிர்ணய குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது. இங்கு இரண்டு செய்திகள் இருக்கின்றன. ஒன்று இலங்கை ஒரு ஜனநாயக தேர்தலுக்கு தயாராக இல்லை - அவர்கள் விரும்பவில்லை. தேர்தல் நடக்கக்கூடாது உள்ளூராட்சி மன்ற தேர்தல்தான் நடக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்ற போது உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணய குழு ஒன்று நியமிக்கப்படுகிறது.

அப்படி என்றால் எல்லை நிர்ணய குழு அறிக்கை வரும்வரை தேர்தல் நடத்தப்பட முடியாது. அது சட்டம் ஆகவே, இது தேர்தலை தள்ளிப்போடுவதற்கான உத்தி. முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அபகரிக்கப்படுகின்ற தமிழரின் நிலங்கள் பொலநறுவையோடும் அநுராதபுரதோடும் சேர்க்கப்பட்டு எல்லை நிர்ணயம் செய்து அவற்றை சிங்கள பிரதேசங்களாக மாற்றும் முயற்சி. அங்கு சிங்கள பிரதிநிதிகளை உருவாக்குவது. நெடுங்கேணி பிரதேச சபை எப்படி எங்களின் கைகளை விட்டு ஒரு சிங்கள பிரதேசமாக மாறியதோ, இதேபோன்று மற்ற பிரதேசங்களையும் சிங்கள மயமாக்கும் சூழ்ச்சி - என்றார். (ஐ-02)

## பஸ் அனுமதி...

குறித்து மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், இந்த விபத்து குறித்து நான் பொலிஸ் தரப்பு மற்றும் ஏனைய தரப்புகளிடம் விசாரணை அறிக்கை கேட்டுள்ளேன். அத்துடன், தேசிய போக்குவரத்து ஆணையாளருடன் பேசி முடிவு ஒன்று எடுத்துள்ளோம்.

அதாவது யாழ்- கொழும்பு மற்றும் ஏனைய தூர இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தையும் வடக்கு மாகாணத்துக்குள் ஓர் இடத்தில் ஒவ்வொரு நாளும் வழித்தட அனுமதியை பரிசோதிப்பது. வழித்தடம் இல்லாது பயணிக்கும் பேருந்துகளுக்கு உடனடியாகவே 10 ஆயிரம் ரூபாய் தண்ட பணம் அறவிடப்படும் - என்றார்.

## பதவி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 4 மாதங்கள் கடக்கின்றன. நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்பவர் முதல் பயணமாக இந்தியாவுக்கு செல்வது சம்பிரதாயம். இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அங்கு வருமாறு இதுவரை உத்தியோக பூர்வமாக எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை. இது தொடர்பில் அரசாங்கமும் பல கோரிக்கைகளை இந்தியாவுக்கு விடுத்தபோதிலும் அவற்றுக்கு சாதகமான பதில் எதுவும் அளிக்கப்படவில்லை.

இந்நிலையில், இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொட தனது தனிப்பட்ட உறவுகளைப் பயன்படுத்தி இந்தியப் பிரதமரையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திக்க வைக்கும் முயற்சிகளை எடுத்தார். எனினும், அவரின் முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து கடந்த வாரம் அரசாங்கம் ஓர் இரகசிய நடவடிக்கையை முன்னெடுத்தது. ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க புதுடில்லிக்கு திடீர் இரகசிய பயணம் ஒன்றை மேற்கொண்டார். இது இந்திய தரப்பின் அழைப்பின் பெயரில் இடம்பெறவில்லை. அத்துடன், இந்திய தூதுவர் மிலிந்த மொறகொடவுக்கும் சாகலவின் பயணம் குறித்து தெரிவிக்கப்படவில்லை.

சாகல தனது புதுடில்லி பயணித்தின் போது, இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் மோகன் குவாத்ரா உள்ளிட்ட பல உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். அத்துடன், இந்தியாவின் கடன் மறுசீரமைப்பு விடயம், ஜனாதிபதி ரணில் இந்திய பிரதமரை சந்திக்கவும் நேரம் ஒன்றை பெறுதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. ஆனால், இவை இரண்டுக்கும் இந்தியாவிடம் இருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும், சாகல இந்தப் பேச்சுகளை இரகசியமாக நடத்தியதால் புதிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இந்தியாவுக்கான தூதுவர் மிலிந்த மொறகொடவுக்கு தெரியாமல் நடத்தப்படும் இந்த விடயங்களால் அவர் கடும் அதிருப்தியடைந்துள்ளார். இதனால், தற்போது இந்திய தூதுவர் பதவியில் இருந்து விலகுவதற்கு மிலிந்த முடிவு செய்துள்ளார்.

எது எப்படி இருப்பினும் மிலிந்த மொறகொட இந்த பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னரே திட்டமிட்டிருந்தபோதிலும் சாகலவின் செயல்பாட்டால் இந்த முடிவு அவசரமாக எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இன்னும் சில நாட்களில் மிலிந்த மொறகொட தனது தூதுவர் பதவியை இராஜினாமா செய்வார் என்ற அறிய வருகின்றது. (ஐ)

## போராட்ட...

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் விற்பனையோ - போதைப் பொருள் பாவனையோ இருக்கவில்லை. அவர்களின் காலத்தில் வடக்கில் போதைப் பொருள் சம்பந்தமான எந்த விதமான பிரச்னையும் இருக்கவில்லை. அவர்களுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்துக்கு இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிஸார் பெருமளவு வந்ததன் பிற்பாடு இங்கு எந்தவிதத்தில் இவ்வளவு போதைப் பொருள் விற்பனையும் - பாவனையும் கூடியது என்பது தொடர்பில் நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த விடயத்தில் பொலிஸார் கூடுமான அளவு அக்கறை காட்டி விசாரணைகளை மேற்கொள்கின்றார்களா? அல்லது அவர்களுடன் சேர்ந்து ஏதாவது நடவடிக்கைகள் நடைபெறுகின்றனவா? என்ற பலவிதமான சந்தேகங்கள் எங்களிடத்தில் எழுகின்றன. ஆகவே, வடக்கு - கிழக்கு மாகாணங்களை எங்களிடத்தில் ஒப்படைத்து நிர்வாகம் செய்வதற்கு - அதிகாரம் செலுத்துவதற்கு இடமளித்தால் இவற்றைய எல்லாம் நாங்கள் தடுத்து நிறுத்த முடியும். என்று இணைய ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (ஐ)

## சகல தனியார்...

யாழ். நகரின் மையப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து சேவைகளை ஆரம்பிக்க மாநகர முதல்வரால் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் பல்வேறு தடைகளால் குழம்பிப் போயின. எனினும், மாநகர முதல்வர் எடுத்த நடவடிக்கைகளை தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை முதல் குறித்த இடத்திலிருந்து தனியார் பேருந்து சேவைகள் அனைத்தையும் இயக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இரவு நேர கொழும்பு பஸ் சேவைகள் அங்கிருந்து நடைபெறுகின்றன.

இந்நிலையில், பின்வரும் விடயங்கள் பொதுமக்களின் கவனத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

தனியார் பேருந்து சேவையின் உள்ளூர், வெளிமாவட்ட, கொழும்புக்கான இரவு நேர சேவைகள் அனைத்தும் நாளை செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறும்.

போக்குவரத்து பொலிஸாருக்கு உதவும் வகையில் மாநகர சபையால் திசை குறிகாட்டி பலகைகள் பொருத்தப்படும். இந்த நடைமுறை பொலிஸாரால் கடுமையாக பின்பற்றப்படும்.

தனியார் போக்குவரத்து பிரிவினரின் உள்ளூர் சேவை பேருந்துகள் நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு தற்போது இயங்கி வரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும். மீண்டும் வரும்போது நெடுந்தூர பஸ் நிலையத்தில் பயணிகளை இறக்கும்.

இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்ட - தூர சேவை பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதி ஊடாக சத்திர சந்தி சமிக்ஞை விளக்கை அடைந்து அங்கிருந்து கே. கே. எஸ். வீதி ஊடாக சென்று பிரதான வீதியை அடைந்து வெளிமாவட்டங்களுக்கான பயணத்தை மேற்கொள்ள வேண்டும். வெளிமாவட்டங்களிலிருந்து வரும்போதும் இதே வழியூடாகவே பஸ் நிலையத்தை அடைய முடியும்.

இ. போ. ச. பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் வெளிமாவட்ட - தூரசேவை பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேம்படி வீதிக்கு செல்வது தடை செய்யப்படுகிறது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மகிந்தவை பதவி விலகுமாறு சஜித் பிரேமதாஸ வலியுறுத்து!



கொழும்பு, நவ. 07

மகிந்த தேசப்பிரிய நீங்கள் உண்மையான இடது சாரியாக இருந் தால் - நீங்கள் உண்மை யிலேயே நாட்டை நேசிப்பவராக இருந்தால் - தேர்தலை ஒத்தி வைப்பதற்காக உரு வாக்கப்பட்ட பதவியி லிருந்து தயவு செய்து இராஜினாமா செய்யுங்கள். உங்களால் அரசாங் கத்துக்கு சவால் விட முடியுமானால் தேர்தலை நடத்துங்கள். தற்போதைய அரசாங்கத்தின் மீதான மக்கள் தீர்ப்பை எதிர்பார்த்து, இந்நாட்டில் உள்ள 220 இலட்சம் மக்கள் காத்திருக்கின்றனர் என்று எதிர்க்கட் சித் தலைவர் சஜித் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட மாவட்டக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டை பேரழிவு நிலைக்கு கொண்டு வந்த ராஜபக்ஷக்கள் சிலரின் உந்துதலால் மீண்டும் எழ முயற்சிக்கின்றனர். விரைவில் நடைபெறவுள்ள தேர்தலில் ராஜபக்ஷவுக்கு நல்ல செய்தியை வழங்க நாட்டு மக்கள் காத்திருக்கின்றனர்.

நாட்டை அழித்து சாம்பலாக்கிய ராஜபக்ஷக்கள் எழுந்து நிற்க முயலும் போது தற்போதைய ஜனாதிபதி அவர்களுக்கு ஒட்சிசன் கொடுக்கிறார். இந்த நேரத்தில் அரசாங்கத்துக்கு சவால் விடுங்கள், தேர்தலை நடத் துங்கள், இந்த நாட்டில் 220 இலட்சம் மக்கள் உள்ள னர். தற்போதைய அரசாங்கம் மீதான மக்கள் தீர்ப்புக் காக காத்திருக்கிறார்கள்

எல்லை நிர்ணயத்தை காட்டி, தேர்தலை ஒத்தி வைத்து, மக்களின் கருத்தை முன்னிலைப்படுத்தும் வாய்ப்பை நாட்டு மக்களிடம் இருந்து பறிக்க இந்த அரசு முயற்சிக்கிறது . இந்த அரசியல் விளையாட்டில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. மகிந்த தேசப்பிரிய விடம் நாங்கள் தெளிவாகக் கூறுகிறோம் நீங்கள் உண்மையிலேயே நாட்டை நேசிப்பவராக இருந்தால், தேர்தலை ஒத்திவைப்பதற்காக உருவாக்கப்பட்ட தேர்தல் வரைபடத்தை சுருக்கி உருவாக்கப்பட்ட இந்த பதவியில் இருந்து விலகுங்கள், அதுதான் எங்களின் முன்மொழிவு.

இப்படிப்பட்ட எல்லை நிர்ணய குழுவை ஆதரிப் பது என்பது தேர்தலை ஒத்திவைக்கும் அரசியல் சதியில் பங்காளியாகிவிடுவது என்பதுதான். நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியை அனுப்புகிறோம், தயாரா குங்கள் உள்ளூராட்சி தேர்தலை மீளப்பெறும் முயற் சிக்கு இடமளிக்க மாட்டோம், பொது மக்களுடன் வீதியில் இறங்கி மக்கள் விரும்பும் தேர்தலில் வெற்றி பெற நிச்சயம் உறுதி ஏற்போம் - என்றார். (ஐ)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
Passport அவசியமில்லை
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இன்னும் ஒரு நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான
ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பு
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
எமக்கூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.
V2 Travels 0768226240 0768226244

# சீனா, இந்தியாவுடன் பேசுவதற்கு 8 பேர் கொண்ட குழு நியமனம்!

கொழும்பு, நவ. 07

**சீனா, இந்தியா நாடுகளுடன் கடன் மறு சீரமைப்பு தொடர்பாக பேச்சு நடத்த எட்டு பேர் கொண்ட குழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிய மித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் விடுத்துள்ள அறிவித்தலின் பிரகாரம், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் சீனா மற்றும் இந்தியாவுடன் பேச்சு நடத்த இந்த எட்டு பேர் கொண்ட குழுவை ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க நியமித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உடனடி நட வடிக்கைகள் எடுக்குமாறு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத் நாயக்கவுக்கு அனுப்பிய அறிவித்தலின் பிரகாரம் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நிதி இரா ஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதி பதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி யின் ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மகிந்த சிறிவர்த்தன மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழு தலையிட்டு இந்தியாவையும் சீனா வையும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான நேர் மறையான இடத்துக்குக் கொண்டு வருவது தொடர் பான விவாதங்களைத் தொடங்கவுள்ளது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள், ஜனதிபதி செயலகத்தின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத்நாயக்கவுடன் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்து ரையாடலின்போது, கடன் மறுசீரமைப்பு செயல் பாடுகளை துரிதப்படுத்த வேண்டும் என்று தெரிவித் திருந்தனர். (ஐ - சி)

# ரோகண விஜயவீரவின் அஸ்தியை குடும்பம், ஜே. வி. பி. ஏற்கவில்லை!

### ஜானக மல்லிமாராச்சி

கொழும்பு, நவ. 07

மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) இயக்கத் தின் தலைவர் ரோகண விஜயவீரவின் அஸ்தியை பெற்றுக் கொள்ளுமாறு விஜயவீரவின் மகன் உவிந்து விஜயவீர உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்த போதிலும் எவரிடம் இருந்தும் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜானக மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார்.

அஸ்தியை பெற்றுக் கொள்வதாக உவிந்து விஜய வீர சில மாதங்களுக்கு முன்னர் உறுதியளித்திருந்த போதிலும் அவர் வரவில்லை என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

ஜே. வி. பி. தலைவர் ரோகண விஜயவீர கொல்லப் பட்டு எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதியுடன் 33வரு டங்களாகின்றன. அன்றைய நாளை முன்னிட்டு, தற் போது கட்சியாகவுள்ள ஜே. வி. பி. ஆண்டுதோறும் 'இல்மஹா விரு சமருவ' என்ற அஞ்சலி விழாவை நடத்தி வருகின்றது.

இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு சுட்டுக்கொல் லப்பட்ட ரோகண விஜயவீரவின் பூதவுடல் பொரளை மாயானத்தில் தகனம் செய்யப்பட்ட பின்னர் மாயான பணியாளர் ஒருவரால் ஜானக மல்லிமாராச்சியிடம் அஸ்தி வழங்கப்பட்டது. அந்த அஸ்தியை அன்று ஜே. வி. பி. இயக்கம் பெற்றுக் கொள்ள மறுத்தது.

"விஜயவீரவின் அஸ்தியை ஜே. வி. பி.யும் அவரின் மனைவியும் பிள்ளைகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் சாம்பலுக்கு நான்தான் சொந்தக்காரன். எனது அரசியலுக்கு விஜயவீர சிறிதும் பொருந்தா விட்டாலும் அந்த மனிதனின் எச்சங்கள் எமது கலாசாரத்தின் அங்கமாக மதிக்கப்பட வேண்டும். அதனால்தான் அஸ்தியை இரகசிய இடத்தில் பாது காப்பாக புதைத்துள்ளேன்" என்று ஜானக மல்லி மாராச்சி மேலும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் ஆட் சிக் காலத்தில் முக்கியமான அமைச்சரும் பிரேமதாஸ வின் விருப்பத்துக்குரியவருமான மறைந்த வீரசிங்க மல்லிமாராச்சியின் மகனே ஜானக மல்லிமாராச்சி ஆவார்.

ஜானக மல்லிமாராச்சியின் சகோதரரான ஜனந்த மல்லிமாராச்சி ஜே. வி. பி. இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

## தேர்தலை பிற்போட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை

### பெவ்ரல் அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 07

பல்வேறு காரணங்களை முன்வைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் தயாராகு மானால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப் போம் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பெவ்ரல் தெரிவித்துள்ளது.

இதேசமயம், உள்ளூராட்சி தேர்தல் நிலைமை தொடர்பில் நாளை செவ்வாய்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நிலைமை குறித்து கலந்துரையாட வுள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பா ளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். (ஐ)

## துயிலும் இல்லத்தில் சிரமதானம் செய்தோருக்கு பொலிஸ் மிரட்டல்



மன்னார், நவ. 07

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட வர்களை பொலிஸார் மிரட்டினர் என்று தெரிய வருகிறது.

எதிர்வரும் 21 - 27ஆம் திகதிகளில் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதற்காக மாவீரர் துயி லும் இல்லங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள் ளப்படுகின்றன.

நேற்றைய தினம் ஆட்காட்டிவெளி மாவீரர் துயி லும் இல்லத்தின் மாவீரர் தின ஏற்பாட்டுக் குழுவினர் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

அச்சமயம் அங்கு வந்த அடம்பன் பொலிஸார், "எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படும்", என்று மிரட்டிவிட்டு சென்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.